விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 129 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 13 வெள்ளிக்கிழமை (26.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






## வடக்கு ஆளுநர் செயலகத்தின் ஊடக அறிக்கைக்கான
## வலம்புரி பிரதம ஆசிரியரின் தன்னிலை விளக்கம்

(08ஆம் பக்கம் பார்க்க)

### போதை வியாபாரிகளை அழிப்பது பாவமல்ல
## தேவையேற்பட்டால் துப்பாக்கியை பயன்படுத்துங்கள் - டிரான் அலஸ்



(கொழும்பு)

நாட்டை அழிக்கும் போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் பாதாள உலகக் குழுவை ஒழிப்பது பாவமல்ல. தேவை ஏற்பட்டால் துப்பாக்கியை பயன்படுத்துங்கள் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

15

### மக்கள் போராட்டம் மீண்டும் ஏற்படாத வகையில்
# பொருளாதாரத்தை கட்டமைப்போம்
## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

மக்கள் போராட்டம் மீண்டும் ஏற்படாத வகையில் பொருளாதாரத்தை வலுவாக கட்டமைப்போம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## QR குறியீட்டுடன் தே.அ.அட்டை

(கொழும்பு)

தற்போது காணப்படும் தேசிய அடையாள அட்டையை விட சிறந்த தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஒப்பந்

15

### கஞ்சாவுடன்
## வவுனியா கடவுச்சீட்டு அலுவலகம் முன் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா பிராந்திய கடவுச்சீட்டு காரியாலயம் முன்பாக நேற்றுக் காலை பொலிஸார் முன்னெடுத்த திடீர் சோதனை நடவடிக்கையின் போது கஞ்சாவினை

15

### இலங்கை விஜயத்தின் மூலம்
## ஈரான் ஒரு சக்தி வாய்ந்த நாடு என்ற செய்தியை உலகுக்கு வழங்கியுள்ளது
### நாடு திரும்பிய வேளை ஈரான் ஜனாதிபதி



(கொழும்பு)

இலங்கை விஜயத்தின் மூலம் ஈரான் ஒரு சக்தி வாய்ந்த நாடு என்ற செய்தியை உலகிற்கு வழங்கியுள்ளதாக ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி தலைநகர் தெஹ்ரானில் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான விஜயம் மேற்கொண்டு மீண்

15

## வருமானம் எட்டக்கூடிய ஆண்டாக அமையும்
### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் காலாண்டில், அரச வருமானம் 834 பில்லியன் ரூபாயாக உயர்வடைந்திருப்பதாகவும், இது எதிர்பார்க்கப்பட்ட அரச வருமானத்திற்கு மேலதிகமான 6% வளர்ச்சியாகும் எனவும் அரச பெருந்தோட்ட தொழில் முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரும் நிதி இராஜாங்க அமைச்சருமான ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

15

### இலங்கைத் தமிழரசுக் கட்சியின்
## மாநாட்டுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜூன் 20ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாநாட்டுக்கு எதிராக நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட

15

## சீன கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதி எதிர்க்கட்சித் தலைவருடன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தந்துள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகார திணைக்களத்தின் பிரதி அமைச்சர், சன் ஹையான் நேற்று முன்தினம் பிற்பகல் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவல

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவு நிலை தவறா நன்றி காக்கும் உங்கள் நாளிதழ்

லங்கா மஹால் பிறைவேட் லிமிட்டட்
(உள்நாட்டு வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை)

**வேலையாள் தேவை**
**(ஆண்,பெண்)**
A/L தகைமையுடைய (கணினி அறிவு அடிப்படை) வேலையாள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
65, 2nd cross street, Vavuniya.
**077 839 3974**
(555)

# விபரீத முடிவெடுத்த அதிபர் உயிரிழப்பு

குருநாகல் பிரதேசத்தை சேர்ந்த அதிபர் ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். குருநாகல், மாஸ்பொத்த பிரதேசத்தில் வசிக்கும் 55 வயதுடைய அதிபர் ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

அவர் குடியிருந்த வாடகை வீட்டிலேயே தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ம்-7,10)

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
### வலிகாமம் வடக்கு பிரதேசசபை உப அலுவலகம் - தெல்லிப்பளை

விண்ணப்பதாரர் - வேலாயுதம் சுரேந்திரன்
முகவரி - மடத்தடி, மாவிட்டபுரம்.

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை. தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 09, ஆயர்பாடி, இலக்கம் 6/3 சொந்தக்காரர் உ.கோ என ஆதனப்பதிவேட்டில் உள்ளது.

குறித்த ஆதனமானது 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 03ம் திகதி, பிரசித்த நொத்தாரிஸ் சிவமயம் முகதாவில் 99 ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதிப்படி வேலாயுதம் சுரேந்திரன் என்பவர்களை வந்தடைந்தது.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று பளை இறைநிலப்பரப்பு 4 குளி 11.63 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி.தவராஜா அவர்களால் வரையப்பட்ட 5464/26.02.2024 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு - 01 துண்டு ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு - சின்னத்தம்பி சிற்றம்பலம் மற்றும் ராஜதரை சிவசக்தியின் ஆதனமும் K.K.S வீதிக்கான ஆறடி ஒழுங்கை முகப்பும்
வடக்கு - வெங்கையா சந்தரலிங்கத்திற்குரிய ஆதனமும்
மேற்கு - தர்மலிங்கம் துளசிதாசன் ஆதனமும்
தெற்கு - திடவீரசிங்கம் மதனகுமாருக்கும் உரிய ஆதனமும்

மேற்குறித்த ஆதனத்தை வேலாயுதம் சுரேந்திரன் எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை(கொல்லங்கலட்டி)

(560)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் தமிழ் பாட ஆசிரியர்
திருமதி **தாரணி ஜெயகாந்தன்**
அவர்களின் தாயார்

**கமலேந்திரன் அன்னலக்சுமி**

அவர்கள் மறைந்த செய்தியறிந்து துயரடைகின்றோம். அவரது மறைவினால் துயரடைந்துள்ள குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**கல்லூரிச் சமுகம்**
**யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

(C-0207)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் உப அதிபர்

**அமரர் ஜெயந்தி ஜெயதரன்**
**(உப அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 19.06.1965
மறைவு 25.04.2024

**கல்லூரிச் சமூகம்**
**யா/ மகாஜனக் கல்லூரி**
**தெல்லிப்பழை**

(C-0206)



### வடமராட்சி வடக்கு தும்பளை
# நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயம்
## வருடாந்த வெளிமடை உற்சவம்
### அறிவித்தலும் ஆசித்தலும் பூஜித்தலும்
**2024.05.10 -11**

நாடுமிகவுடையாள் நெல்லண்டை எம்பதியுறைவாள்
சாடும் வினைகள் தகர்த்திடும் சால்புடையாள் - பீடுடைய
தக்கன் செய்மமதை வேள்விதனை மாய்த்திடும்
மிக்க மதிநலத்தாள் மலர்த்தாள் சரண்

சுபமங்களம் நிறைந்த குரோதி வருஷம் சித்திரை மாதம் 20ம் நாள் (03.05.2024) வெள்ளிக்கிழமை விளக்கு வைத்தலும் தொடர்ந்து (10.05.2024) வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமை நடைபெறவிருக்கும் அனைத்து தெய்வதா கைங்கரியங்களும் பூர்வீகம் பிசகாது நடைபெறத் திருவருள் நிறைய எல்லாம் வல்ல அன்னை நெல்லண்டைப் பத்திரகாளி அம்பாளின் ஆசி வேண்டியும் அடிபணிந்து வாழ்த்திக் கொண்டும் அனைத்து நிலை அடியார்களும் அன்பர்களும் உரித்தாளர்களும் வந்து அனைத்து வழிபாடுகளையும் வேண்டுதல்களையும் நிறைவேற்றிக் கொள்க. அன்னையை எல்லோரும் வேண்டிக் கொள்வோம்.

**குறிப்பு :** தும்பளை இலட்சுமணந்தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் வட பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்
விளக்கு வைத்தல் : (26.04.2024) இன்று வெள்ளிக்கிழமை
வேள்வி உற்சவம் : (03.05.2024 - 04.05.2024) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆசித்தலும் பூஜித்தலும் சிறப்புற அன்னை அருள் தருக

அன்னையின் அடிமை
சைவசித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் B.A M.A Dip in Edu
சிவஸ்ரீ இராம சுந்தரலிங்கக் குருக்கள்
சிவஸ்ரீ சோமதனஞ்சயக் குருக்கள்
[illegible] குருக்களும் பரம்பரை அர்ச்சகரும் ஆதீன கர்த்தாவும்

(C-0204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலில் நிச்சயமாக போட்டியிடுவேன்

## ரணில் அறிவிப்பு



**(கொழும்பு)**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமாக போட்டியிடுவேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க, பசில் ராஜபக்ஷவிடம் அறிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என்ற உத்தியோகபூர்வ அறிவிப்புக்கு பின்னர் பொதுஜன பெரமுன வின் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவிடம் தெரிவித் துள்ளார்.

கொழும்பில் உள்ள ஜனாதி பதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் பசில் ராஜபக்ஷவிற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே பசில் இந்த விடயத்தை தெரி வித்துள்ளார்.

இதன்போது ஜனாதிபதி தேர்தலில் தான் நிச்சயமாக போட்டியிடுவேன் என பசில் ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி தெரி வித்துள்ளார். (நி-6)

## நாடு திரும்பினார் ஈரான் ஜனாதிபதி

(டெஹ்ரான்)

ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி ஈரான் சென்றடைந்தார்.

இலங்கைக்கு வருகை தந்த இவர், ஈரானுக்கு சொந்தமான விசேட விமானம் மூலம் அவர் கட்டுநாயக்க விமான நிலை யத்திலிருந்து புறப்பட்டு சென்ற தாக தகவல் தெரிவிக்கப்பட்டு ள்ளது. உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தை திறந்து வைப்பதற்காக அவர் இலங் கைக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பெரிய வெங்காய இறக்குமதிக்கு அனுமதி

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து 2000 மெட்ரிக் தொன் பெரிய வெங் காயத்தை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த தகவலை வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் லங்கா சதொச ஊடாக இந்த இறக்குமதி நட வடிக்கை மேற்கொள்ளப்பட வுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.( நி-6)

## குறைவடைந்தது மசகு எண்ணெய் விலை

(வோஷிங்டன்)

உலக சந்தையில் மசகு எண் ணெய் விலையானது நேற்று முன்தினம் புதன் கிழமை குறைவடைந்து 87 டொலர் வரை பதிவாகியுள்ளது.

இதன்படி, பிரண்ட் மசகு எண்ணெய் பீப்பா ஒன்றின் விலை 87.92 டொலராக பதிவாகியுள்ளது. கடந்த ஒரு மாதத்தை கருத்தில் கொண்டு உலக சந்தையில் மசகு எண் ணெய் விலை தொடர்ந்து 90 டொலர் வரை காணப்பட்டதோடு பங்குகள் அதிகரிப்பின் காரணமாக உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை குறைவடைந்துள்ளது. (நி-6)

## பாக். உயர்ஸ்தானிகர் சபாநாயகர் சந்திப்பு



(கொழும்பு)

பாகிஸ்தானின் இலங்கை க்கான புதிய உயர்ஸ்தானிகர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் பாஹீமுல் அஸீஸ் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர் தனவை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பில் பரஸ்பர நலன்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன் இரு நாடு களுக்கும் இடையில் நிலவி வரும் உறுதியான நட்புறவை மேலும் வலுப்படுத்துவது தொடர் பில் கவனம் செலுத்தப்பட் டது. (நி-6)

# ஆஸ்துமாவிற்கு வழங்கப்படும் மருந்துகளால் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பாதிப்பில்லை

## இலங்கை சுவாச நிபுணர்கள் சங்கம்

(கொழும்பு)

ஆஸ்துமா நோயால் பாதிக் கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள், ஆஸ்துமாவுக்குப் பயன்படுத் தப்படும் மருந்துகளை ஒரு போதும் நிறுத்த முயற்சிக்கக் கூடாது என இலங்கை சுவாச நிபுணர்கள் சங்கத்தின் தலை வர் வைத்தியர் நிரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் ஏழாம் திகதி இடம்பெறவுள்ள "உலக ஆஸ் துமா தினத்தை" முன்னிட்டு நேற்று முன்தினம் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே விசேட வைத்தியர் இதனைத் தெரிவித்தார்.

பல கர்ப்பிணித் தாய்மார்கள் இந்த மருந்துகளைப் பயன்படு த்துவதை நிறுத்திய பிறகு பக்க விளைவுகளை அனுபவிக் கிறார்கள்.

மேலும், ஆஸ்துமா நோய்க்கு வழங்கப்படும் மருந்துகள் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு எந்தவிதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது.

ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்ட சகல மக்களும் உரிய மருந்துகளை தொட ர்ச்சியாக உட்கொண்டால் இதனை கட்டுப்படுத்த முடியும் என விசேட வைத்திய நிபுணர் தெரிவித்தார்.

ஆஸ்துமா நோயாளிகளைக் கொண்ட உலகின் முன்னணி நாடுகளில் இலங்கையும் ஒன்று.

குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் ஆஸ்து மாவால் பெரும் மன மற்றும் உடல் ரீதியான சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

சரியாகக் கட்டுப்படுத்தப்படாத ஆஸ்துமா மரணத்திற்குக் கூட வழிவகுக்கும் என்று மருத்து வர்கள் வலியுறுத்துகின்றனர்.

95 வீத நோயாளிகள் எளிமையான, மிகவும் பயனுள்ள மருந்துகளால் நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அறியாமையால் உலகில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 5 இலட்சம் பேர் ஆஸ்துமாவால் இறக்கிறார்கள் என்று தரவு காட்டுகிறது.

ஆஸ்துமா உள்ள கர்ப்பிணிப் பெண்கள் மருந்தை நிறுத்தி னால் பக்க விளைவுகள் ஏற்படு மென தெரிவித்தார். (நி-6)

## இழப்பீடு கேட்கும் மைத்திரி

(கொழும்பு)

ஊடகங்கள் ஊடாக வெளி யிட்ட அறிக்கையினால் ஏற் பட்ட அவமதிப்புக்கு இழப்பீடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பியு ள்ளார்.

மைத்திரிபால சிறிசேன வுக்கு 1000 மில்லியன் ரூபா நட்டம் அல்லது இழப்பீட்டுத் தொகையை 14 நாட்களு க்குள் வழங்குமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் சாதாரண தர மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகளுக்கு தடை

(கொழும்பு)

கல்வி பொது தராதர சாதா ரண தரப் பரீட்சைக்கு மாண வர்களை தயார்படுத்துவ தற்கான மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள், செயல மர்வுகள் போன்றவை எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணி முதல் இடைநிறுத்த ப்படும் என பரீட்சைகள் திணைக் களம் அறிவித் துள்ளது.

இப்பரீட்சை தொடர்பான விதி முறைகளை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக் கப்படும் என வும் எச்சரிக்கை விடுக்கப்பட்டு ள்ளது. (நி-6)

கண்ணீர் அஞ்சலி
எமது சக உத்தியோகஸ்தர்
திருமதி. நிறோஜினி ஜெசிந்தன்
அவர்களது பாசமிகு தந்தை
அமரர். சின்னவன்
கதிரவேலு



மண்ணில் 02.10.1952
விண்ணில் 24.04.2024
அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!
பிரிவால் துயருறும்
கல்விசாரா ஊழியர் நலன்புரிச்சங்கம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கோப்பாய்.
(0027)

லங்கா மஹறால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
MoneyGram. Ria
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு
077 339 3974
(549)

கண்ணீர் அஞ்சலி
எமது யாழ்ப்பாணம் காணிப் பதிவகத்தில் மேலதிக மாவட்டப்பதிவாளராகப் பணியாற்றும்
திருமதி. மாருதி திலீப்குமார் அவர்களின் பாசமிகு தாயார்
அமரர். திருமதி.
இலட்சுமிநாதன் புஸ்பராணி அவர்கள்



24.04.2024 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
(சி-0203)
ஊழியர் நலன்புரிச்சங்கம், பதிவாளர் நாயகம் திணைக்களம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொங்கி எழுந்தது பெங்களூரு

- ஹைதராபாத்துக்கு கொடுத்தது பதிலடி
- தொடர் தோல்விகளிலிருந்து உற்சாக வெற்றி



தொடர்ந்து 6 போட்டியில் தோல்வியடைந்த பெங்களூரு அணி நேற்று வெற்றியை பதிவு செய்தது. கோலி, படிதர் அரைசதம் விளாசினர்.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17வது சீசன் நடக்கிறது. ஹைதராபாத் ராஜிவ் மைதானத்தில் நடந்த லீக் போட்டியில் பெங்களூரு - ஹைதராபாத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற பெங்களூரு அணித் தலைவர் டுபிளசி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

**படிதர் விளாசல்**

பெங்களூரு அணிக்கு விராத் ஹோலி, டுபிளசி (25) ஜோடி நல்ல ஆரம்பம் வழங்கியது. வில் ஜாக்ஸ் (6) ஏமாற்றினார். மயங்க் மார்கண்டே வீசிய 11ஆவது ஓவரில் வரிசையாக 4 சிக்சர் உட்பட 27 ஓட்டங்கள் விளாசிய படிதர், 19 பந்தில் அரைச்சதம் எட்டினார். மூன்றாவது விக்கெட்டுக்கு 65 ஓட்டங்கள் சேர்த்தபோது உனத்கட் பந்தில் படிதர் (50) ஆட்டமிழந்தார். பொறுப்பாக ஆடிய ஹோலி (51), தன்பங்கிற்கு அரைசதம் அடித்தார். மஹிபால் லாம்ரர் (7), தினேஷ் கார்த்திக் (11) சோபிக்கவில்லை. நடராஜன் வீசிய கடைசி ஓவரில் வரிசையாக ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த ஸ்வப்னில் சிங் (12) கடைசி பந்தில் ஆட்டமிழந்தார்.

**19 பந்துகளில் அரைச்சதம்**

ஐ.பி.எல்., அரங்கில் அதிவேக அரைசதம் விளாசிய பெங்களூரு வீரர்கள் வரிசையில் 2ஆவது இடத்தை (தலா 19 பந்து) ரொபின் உத்தப்பாவுடன் (எதிர்: பஞ்சாப், 2010) பகிர்ந்து கொண்டார் ரஜத் படிதர். முதலிடத்தில் கிறிஸ் கெய்ல் (17 பந்து, எதிர்: புனே, 2013) உள்ளார்.

20 ஓவர்களில் பெங்களூரு அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்களை எடுத்தது.

**சிறந்த பந்துவீச்சு**

ஐ.பி.எல்., அரங்கில் 100ஆவது போட்டியில் சிறந்த பந்துவீச்சை பதிவு செய்த 5ஆவது பந்துவீச்சாளரானார் உனத்கட் (3/30). முதலிடத்தில் டில்லியின் அமித் மிஸ்ரா (4/1, எதிர்: பஞ்சாப், 2016) உள் ளார்.

கிரீன்(37) ஆட்டமிழக்காமல்இருந்தார்.

**ஹெட் ஏமாற்றம்**

சவாலான இலக்கை விரட்டிய ஹைதராபாத் அணிக்கு டிராவிஸ் ஹெட் (1) ஏமாற்றினார். அபிஷேக் சர்மா (31) ஆறுதல் கொடுத்தார். ஸ்வப்னில் சிங் பந்தில் மார்க்ரம் (7), கிளாசன் (7) ஆட்டமிழந்தனர். கரண் சர்மா "சுழலில்" நிதேஷ் குமார் ரெட்டி (13), அப்துல் சமத் (10) சிக்கினர். ஸ்வப்னில் பந்தில் வரிசையாக 2 சிக்சர் பறக்கவிட்ட அணித் தலைவர் கம்மின்ஸ் (31) ஓரளவு கைகொடுத்தார். கிரீன் பந்தில் புவனேஷ்வர் குமார் (13) ஆட்டமிழந்தார்.

20 ஓவர்களில் ஹைதராபாத் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களை மட்டும் எடுத்து 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

ஷாபாஸ் அகமட் (40), உனத்கட் (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பெங்களூரு சார்பில் ஸ்வப்னில், கரண் சர்மா, கிரீன் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (ம-7,10)

# ‘உலக’ தூதர் போல்ட்




"ரி20" உலகக்கிண்ண கிரிக்கெட் தூதராக உசைன் போல்ட் நியமிக்கப்பட்டார்.

ஐ.சி.சி., சார்பில் "ரி20" உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் மே.மே.தீவுகள், அமெரிக்காவில் ஜூன் 1-29 வரை நடக்கவுள்ளது.

இத்தொடரின் தூதராக தடகள மன்னன், ஜமைக்காவின் உசைன் போல்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2008 (பீஜிங்), 2012 (லண்டன்), 2016 (ரியோ) என தொடர்ந்து மூன்று ஒலிம்பிக்கில் 100, 200 மீ., ஓட்டத்தில் தங்கம் வென்றார். தவிர இருமுறை 4X100 மீ., ஓட்டத்தில் தங்கம் கைப்பற்றியுள்ளார்.

தவிர 100 மீ., (9.58 வினாடி), 200 மீ., (19.19 வினாடி) ஓட்டத்தில் உலக சாதனை படைத்துள்ளார். புதிய "ரோல்" குறித்து உசைன் போல்ட் கூறிய தாவது,

கிரிக்கெட்டுக்கு எப்போதும் எனது இதயத்தில் ஸ்பெஷல் இடம் உண்டு. ஏனெனில் கரீபிய மக்களின் வாழ்க்கையில் இது ஒரு அங்கமாக உள்ளது.

தற்போது "ரி20" உலகக்கிண்ணத் தூதராக நியமிக்கப்பட்டது மகிழ்ச்சியாக உள்ளது.

உலகின் மிகப்பெரிய விளையாட்டு மையமாக உள்ள அமெரிக்காவுக்கு கிரிக்கெட்டை கொண்டு வருவது நல்ல விடயம். இந்த முயற்சி, 2028 லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் கிரிக்கெட் இடம்பெற உதவும். இவ்வாறு அவர் கூறினார். (7,10)




## கே.சீ.சீ வெற்றிக் கிண்ணம் - 2024

# யாழ்.பல்கலைக்கழக அணி காலிறுதி போட்டிக்குத் தகுதி

(யாழ்ப்பாணம்)

கே.சீ.சீ.சீ வெற்றிக்கிண்ணத் தொடரின் 14ஆவது போட்டி 07.04.2024 அன்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்றது.

இப்போட்டியில் யாழ்.பல்கலைக் கழக அணி ஸ்கந்தா ஸ்ரார் அணியை 7 இலக்குகளால் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா ஸ்ரார் அணி 21 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் மிதூரஸன் 17, டிலக்ஸன் 28, துளசனன் 47, பிருந்தன் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.பல்கைக்கழக அணி சார்பாக சிறிமீனகன் 5 ஓவர்களில் 25 ஓட்டங்களைக் கொடுத்து 4, சுகிதன் 5 ஓவர்களில் 26 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

138 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்.பல்கலைக் கழக அணி 14.5 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களை எடுத்து 7 இலக்குகளால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் ரஜீபன் 49, ஐவன் 29, யதூரஸன் 39 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்கந்தா ஸ்ரார் அணி சார்பாக பிரிஸன், தனுஸன் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.கந்தர்மடம் பழம் வீதி அருள்மிகு ஞானவைரவர் ஆலய பூங்காவனத்திருவிழா நேற்று முன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

# வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் போராட்டம் நடத்த தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் 'நமக்காய் நாமே' எனும் தொனிப் பொருளில் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திபின்போதே வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் குறித்த போராட்டத்திற்கான அழைப்பை விடுத்திருந்தனர்.

நாடு தழுவியரீதியில் பட்டதாரிகள் அனைவரும் ஜனநாயக அடிப்படையில் அமைதியான போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் வடமாகாண பட்டதாரிகளாகிய நாமும் நான்கு கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பில் போட்டிப்பரீட்சைகள் நிராகரிப்பு செய்ய வேண்டும், ஏற்கனவே அரச சேவையில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை மீண்டும் ஆசிரியர் ஆட்சேர்ப்பு முறையில் கொண்டு வருதல் நியாயமற்றது. அது வேலையற்ற பட்டதாரிகளை பாதிக்கின்றது, வடமாகாணத்திலுள்ள விசேட தேவையுடைய பட்டதாரிகளின் வாழ்வியல் தொடர்பிலான அரசாங்கத்தின் கரிசனை என்ன?, வேலையற்றப்பட்டதாரிகளும் சமூகத்தில் எதிர்கொள்ளும் அவமானங்களும் சவால்களும் அதன் ஊடாக ஏற்படும் மன அழுத்தங்கள் மற்றும் பட்டதாரிகளின் எதிர்காலம் குறித்தும் அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் என்ன ?

இதுபோன்ற கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து அதனைத்தொடர்ந்து நமது கோரிக்கைகள் உள்ளடக்கிய மகஜரினை ஆளுநரினூடாக ஜனாதிபதிக்கு மற்றும் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்குமான மகஜர் கையளிக்கப்படவுள்ளது. (நி-6-33)

# கொக்குவில் புகையிரத நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் புகையிரத நிலையத்தில் பயணச்சீட்டு வழங்கும் நடவடிக்கை தற்காலிமாக நிறுத்தப்பட்டுள்ளது.

கொக்குவில் உப ரயில் நிலையத்தில் சுற்றறிக்கை மூலம் நியமிக்கப்பட்ட ரயில் நிலைய அதிபர் மீது நிதி மோசடிக் குற்றச்சாட்டு ஒன்று பதிவாகி உள்ளதாகவும் இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.ரயில் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பயணச்சீட்டுக்களை யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-33)

# தமிழர்களுடைய பூர்வீக நிலங்களில் குடியமர்த்தப்படும் சிங்கள மக்கள்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவில் தமிழர்களுடைய பூர்வீக நிலங்களை அபகரித்து சிங்கள மக்கள் குடியமர்த்தப்படுகிறார்கள் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் மொத்த நிலப்பரப்பில் கிட்டத்தட்ட 5 இலட்சத்து தொண்ணூறாயிரம் ஏக்கரில் 74.24 வீதமான காணிகள் வன இலாகாவினுடைய பொறுப்பில் இருக்கின்றது.



மக்களுக்குத் தான் அரசாங்கமே தவிர, அரசாங்கத்துக்கு மக்கள் அல்ல. அரசாங்கத்துக்கு மக்கள் என்ற நிலையில் அரசு இயங்கக்கூடாது. மக்களுடைய காணிகளை மக்களுக்கு விடுவித்து அந்த காணிகளின் ஊடாக மக்கள் தங்களுடைய விவசாய நடவடிக்கையை செய்து அவர்களுடைய வாழ்வாதாரத்தை வளமாக கொண்டு நாட்டுக்கு உதவக்கூடிய நிலையில் தான் மக்களை அரசாங்கம் பாவிக்க வேண்டும். அதனை விடுத்து தமிழ் மக்களை ஒடுக்கும் விதமாக செயற்படக்கூடாது என தெரிவித்தார். (நி-6-299)

# அஞ்சலியும் நினைவுப் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 47 ஆவது நினைவு நாளை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00மணியளவில் யாழ். தந்தை செல்வா நினைவிட வளாகத்தில் கலாநிதி சு.ஜெபநேசன் (ஓய்வு நிலை ஆயர், தலைவர் தந்தை செல்வா அறங்காவலர் குழு) தலைமையில் "இலங்கை தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கான வாய்ப்புகளும் சவால்களும்" என்ற தொனிப் பொருளில் பேராசிரியர் கே.டி கணேசலிங்கம் (யாழ்.பல்கலைக்கழகம்) நினைவு பேருரை ஆற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையினால் தெல்லிப்பளை ஆஸ்பத் திரி வீதியில் சேமக்காலையில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் நினைவுத்தூபியில் பிற்பகல் 4 மணியளவில் அஞ்சலி நிகழ்வு இடம் பெறவுள்ளது. (நி-6)



தொண்டைமானாறு கலைமகள் சனசமூக நிலைய புதிய கட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நிலைய தலைவர் மகாலிங்கம் மகான் தலைமையில் கெருடாவில் தெற்கு வல்லை வீதியில் நடைபெற்றது. (படம்: மகாலிங்கம்)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி.ஹிமாலினி தினேஸ்சுதன்
SLTS-2-I (B.A(Hons),PGDE, MED
கல்வியியல் முதுமாணி



திரு.ஜேக்கப் ஜோண் கியூபேட்
SLTS-I , B.A,PGDE, Master of Christian studies
கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணி

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 38 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய ஆசிரியர்களை பாடசாலை சமூகம் சார்பாக வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்

(559) Best Wishes

ஆசிரியர் நலன்புரி கழகம்,
யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் கீழ் அமைந்துள்ள பசுபதீஸ்வரர் (சிவன்) ஆலய த்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைத்தினால் எதிர்வரும் 2024.05.19 திகதி ஆரம்பிக்கப்படவுள்ள இலவச கலைப்பயிற்சி நெறிகளான பண்ணிசை, யோகா மற்றும் நடனம் என்பவற்றிக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

வயதெல்லை 6-18 வார இறுதி நாட்களில் நடைபெறும். குறித்த நிபந்தனைகளுக்கு அமைவாக ஆர்வமுள்ள மாணவர்கள் தங்களது சுய விபரத்தினை எதிர்வரும் 2024.05.15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தின் நிர்வாக கிளையில் அல்லது Dsoffieppd @ gmail.com ஊடாக அனுப்பி வைக்க முடியும் என பிரதேச செயலாளர் சி.சத்தியசிவன் அறிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி வருட புத்தாண்டுப் பலன்கள்

கும்ப ராசியின் அதிபதி சனி. இவர்கள் இயல்பிலேயே ரொம்ப மன இறுக்கம் கொண்டவர்கள். இவர்கள் என்ன எண்ணுவார்கள் என கண்டு பிடிப்பது மகா கஷ்டம். இந்த புதுவருடத்தில் அதிரடி செவ்வாய் இவர்கள் ராசியில் அமர்ந்துள்ளார்.

எனவே இந்த வருடம் இவர்களால் அமைதியாக இருக்க இயலாது. மனதில் உள்ளதை வெடித்துச் சிதறிவிடுவர். எத்தனை கெட்ட புத்தி இருக்கிறது பார். நல்லவன்னு நினைச்சு ஏமாந்துட்டோம் என புலம்புவர். ஆக எப்போதும் போல் வாய்மூடி மௌனியாகவே இருக்கவும். இல்லாவிடில் கதை கந்தலாகிவிடும்.

## தனம்

உங்களின் 2 ஆம் இடத்தில் உச்ச சுக்கிரன் அமர்ந்துள்ளார். எனவே பண வரவுக்கு குறைவிருக்காது. உங்கள் பெற்றோர் வகையில் தன வரவு அதிகரிக்கும். வெளிநாட்டு உறவுகள் கிடைக்கும்.

## சகோதரம்

உங்களின் இளைய சகோதரர் உங்களுடன் வந்துசேர்வர். உங்களின் சில சகோதரர்கள் அரசியலில் ஈடுபடுவர். அதனால் அவர்களுடன் சேர்ந்து நீங்களும் நிறைய மனிதர்களின் சந்திப்பை பெறுவீர்கள்.

இதனால் குடும்ப வாழ்வின் போக்குமாறுபடும். அரசு ஒப்பந்தம் பெறு வீர்கள். அதன்மூலம் பண விருத்தி அதிகரிக்கும். அரசு சார்ந்த உதவியாளர் கிடைப்பர். விலை மிகுந்த கைபேசி வாங்குவீர்கள்.

## நோய்


கும்பம்

தொண்டையில் நீர். சளி கட்டிக் கொள்ளும். அல்லது பாதத்தில் வலி எடுக்கும். முதலிலேயே மருத்துவரை அணுகி முறையாக மரு ந்தை சாப்பிடவேண்டும். ஆரோக்கியம் சம்பந்தமாக சிலர் கடன் வாங்க நேரிடும்.

எதிரி: உங்களுக்கு எதிரி வெளியில் கிடையாது.

சில சமயம் உங்களின் பேச்சு முதல் எதிரியாகி விடும். பேச்சைச் சுருக்க எதிரி குறைவர். வழக்கு போட் டோமே அது என்னாச்சு என விசாரிக்கும் நிலையில் வழக்கு இருக்கும்.

**வேலை:** இப்போது கிடைக்கும் வேலை ஆரோக்கியம், பண சம்பந்த வங்கிகள், வெளிநாட்டு பண பரிவர்த்தனை, வேற்று மொழி பேசும் வேலை என அமையும். உங்களுக்கு வேலை கிடைத்தால், தனியாக இருக்கவேண்டி இருக்கும்.

## எதிர்பாராத இடையூறு

துன்பம் தரும் எட்டாமிட அதிபதி 2 ஆம் இடத்தில் உச்ச நீசபங்கம். எனவே அவர் பலம் பெற்று உள்ளார். இந்த வருட அனுமானம் உங்கள் குடும்பத்தினரால் ஏற்படும். உங்களுடைய சொற்கள் துன்பமாக மாறும். உங்கள் எதிரிகள் மறைமுக தொல்லை தருவர்.

## அதிஷ்டம்



உங்கள் யோக அதிபதி உச்சம். எனவே யோகம், பணவரவு இவற்றிற்கு குறை விருக்காது. எனினும் சில அதிஷ்டம் சற்று குறைவு படும். இதற்கு காரணம் அதிஷ்ட அதிபதி உச்சமாகி கூடவே 8 ஆம் அதிபதியும் பலமாக இருப்பதே ஆகும்.

## லாபம்

உங்கள் லாபாதிபதி உபஜய ஸ்தானத்தில் உச்ச சூரியனுடன் அமர்ந்துள்ளார்.

எனவே அவர் குறுகிய அலைச்சல், நிறைய மனிதர் சந்திப்பு என இவ் வகையில் லாபம் தர இயலும்.

மேற்கண்ட வழி என்பது அரசிய லைக் குறிக்கிறது. எனவே இவ் வருடம் உங்களில் பலர் அரசியலில் ஈடுபடுவீர்கள். அதனால் அரசியல் சார்ந்த அலைச்சல்கள் உண்டு.

## விரயம்

உங்கள் ராசியாதிபதியே உங்களின் விரயாதிபதி. நீங்கள் இந்த வருடம்,பிறர் பெருமையாக பேச வேண்டும் என்றே செலவழிப்பீர்கள். நிறைய செலவழித்து நிறைய புகழ் வாங்கி விடுவீர்கள். அலைச்சலும் ஒரு கட்டுக்குள் தான் அமையும்.

இந்த வருடம் கும்ப ராசியினர் சற்று அடக்கி வாசித்தால் வாழ்வு இனிக் கும். வாழ்வின் வழமை இவர்களிடமே உள்ளது. இவர்கள் 60 வீதம் மதிப் பெண் பெறுவர்.

## பரிகாரம்

சனி + செவ்வாய் சேர்க்கைக்கு சனிக்கிழமை நாகலிங்க பூ எள்ளுருண்டையுடன் அகல் விளக்கில் கருநீல துணியில் 22 மிளகை மூட்டை கட்டி கருநீல திரி இட்டு, தீபம் ஏற்றவும்.

(தொடரும்)

# இராசிபலன்

26.04.2024
சித்திரை 13, வெள்ளிக்கிழமை
துதியை முற்பகல் 7.22 மணிவரை

அனுசம் பின்னிரவு 02.55 மணிவரை
சுபநேரம் 5.59-7.29மணிவரை
இராகுகாலம் 10.29-11.59 மணிவரை

சந்திராஷ்டமம்
ரேவதி

வளவன்


மேஷம்

உடல் நலனில் கவனம் தேவை,வேலைச் சுமை கூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்,மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.


கடகம்

மற்றவர்கள் நலன் கருதி எடுத்தமுயற்சிகள் கைகூடும்,தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்,வழிபாட்டில்ஆர்வம் காட்டுவீர்கள்.


துலாம்

பொது வாழ்வில் புகழ் கூடும், பெரிய மனிதர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும்,சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்,தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.


மகரம்

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்,வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்,போசன சுகமுண்டு.


ரிஷபம்

வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழ் வீர்கள்,குடும்பத்தில் சுகங்களும் சந்தோஷமும் அதிகரிக்கும்.


சிம்மம்

வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள்,பெரிய மனிதர்கள் சந்திப்பால் பெருமையடைவீர்கள் , உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப் புண்டு.


விருச்சிகம்

உறவினர் பகைமாறும்,எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்,போசன சுகமுண்டு,கற்பனை மிகுதியான நாள்.


கும்பம்

வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்,திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்,செய் தொழில் மேன்மையுண்டு.


மிதுனம்

ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசிவழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.


கன்னி

உயர்வான சிந்தனைகள் மனதில் குடி கொள்ளும், செயற்பாட்டில் முன்னேற்றம் காண்பீர்கள்,வழிபாடு காரிய வெற்றி தரும்,போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.


தனுசு

வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும் , சுற்றியிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது,சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்,இடமாற்றத்தால் இனிய மாற்றம் காணவேண்டிய நாள்.


மீனம்

எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள் ,இழுபறி யாக இருந்த காரியங் களில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் நிலவிய குழ ப்பங்கள் அகலும்.

உன்னுடைய மனப்பா[illegible]ர்வைத் தீர்மானிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக்காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்

ஆரம்பத்தில் பீடத்திற்கு வருடத்திற்கு 75 மாணவர்களுடன் ஆரம்பித்து இன்று 225 மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

**விவசாயபீடம்**

1978 களில் இப்பீடத்தினை அமைக்க பல்கலைக்கழகம் முயன்றது இதற்காக புவியியல் பேராசிரியர் எஸ். செல்வநாயகம் தலைமையில் மூதவைக்குழு அமைக்கப்பட்டது. இவரது மரண த்தின் பின் இப்பணியை 1981 இல் இருந்து பேராசிரியர். பால சுந்தரம்பிள்ளை பொறுப்பேற்று முன்னெடுத்திருந்தார்.

இப்பீடத்தை கிளிநொச்சியிலா அல்லது திருநெல்வேலியிலா அமைப்பது என்ற இரு நிலைப்பாட்டின் இறுதியில் கிளிநொச்சியில் அமைப்பதென்ற முடிவு எடுக்கப்பட்டது. துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா காலத்தில் 1991 டிசெம்பர் மாதம் கிளிநொச்சி விவசாய உள்ளக பயிற்சி மையத்தில் தற்காலிகமாக பீடம் ஆறு துறைகளுடன் ஆரம்பிக்கப்பட்டு 1996 இறுதிவரை இப்பீடம் கிளிநொச்சியில் இயங்கி யுத்தம் காரணமாக யாழ்ப்பாணத்திற்கு இடம்மாற்றப்பட்டது. பயிரியல், விவசாய உயிரியல், விவசாய இரசாயனவியல், விவசாயப் பொறியியல், விலங்கு விஞ்ஞானம், விவசாயப் பொருளியல் என்பன துறைகளாகும்.

முதல் பீடாதிபதியாகவிருந்த பேராசிரியர். கந்தையா பதவியிலிருந்த காலத்தில் திடீரென மரணித்ததால் பீட வளர்ச்சியில் பாதிப்பு உருவானது. இவரது மரணத்தின் பின் பேராசிரியர்கள் எஸ்.மோகனதாஸ், ஏ.நவரட்ணராஜா பதவிக் காலத்தைப் பகிர்ந்து பீடாதிபதியாகச் சேவையாற்றினார்கள். இப்பீடம் 1997 இலிருந்து 2014 வரை திருநெல்வேலியில் சில புதிய கட்டடங்களுடனும் வாடகை வீடுகளிலும் இயங்கியதென்பது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி அறிவியல் நகரில் இப்பீடக் கட்டடங்கள் 2014 இல் கட்டி முடிக்கப்பட்டு மீண்டும் அங்கு இயங்கத்தொடங்கியது. அறிவியல் நகர் இடவமைவுத் தெரிவு, விவசாயபீட உட்கட்டுமான வளர்ச்சியில் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி. அரசரட்ணம் ஆற்றிய சேவைகள் பாராட்டிற்குரியவை. பீடத்தின் கடின முயற்சியால் ஜப்பானின் ஜெய்கா உதவியுடன் மிகப்பெரிய ஆய்வுகூடமும் அமைக்கப்பட்டுள்ளது. இப்பீடத்தின் பீடாதிபதிகளாக பேராசிரியர்கள் எஸ்.கந்தையா, எஸ்.மோகனதாஸ், ஏ.நவரட்ணராஜா, ஆர்.விஜயரட்ணம், எஸ்.இராசதுரை, திருமதி.சிவமதி சிவச்சந்திரன், கே.மிகுந்தன், திருமதி.மிகுந்தன், சூரியகுமார் ஆகியோர் பதவி வகித்துள்ளனர். இன்று பேராசிரியர் எஸ்.வசந்தரூபா பீடாதிபதியாகக் கடமையாற்றுகின்றார். இப்பீடத்திற்கு வருடாந்தம் 200 மாணவர்களுக்கு மேல் அனுமதிக்கப்படுகின்றனர்.

**முகாமைத்துவ மனிதவள கற்கைகள் வணிக பீடம்**

வெள்ளிவிழா ஆண்டான 1999 மேல் இப்பீடம் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை காலத்தில் நிறுவப்பட்டது. இப்பீடம் ஆரம்பிப்பதற்கு முன் கலைப்பீடத்தின் கீழ் வர்த்தக முகாமைத்துவம் என ஒரு துறை இருந்து பின்னர் இத் துறை வர்த்தகம், முகாமைத்துவம் என இரண்டு துறைகளாக கலைப்பீடத்தின் கீழ் இருந்தன. இந்த இரண்டு துறைகளை உள்வாங்கியே புதிய பீடம் அமைக்கப்பட்டது. தற்போது ஐந்து துறைகளும் ஓர் அலகுடனும் ஆறு கற்கைநெறிகளை முன்னெடுக்கின்றது. துறைகளாவன சந்தைப்படுத்தல், மனிதவள முகாமைத்துவம், கணக்கியல், நிதியியல், வணிகம் மேலும் சுற்றுலா விருந்தோம்பல் அலகு பீடாதிபதியின் கீழ் இயங்குகின்றது. பீடம் ஆரம்பத்தில் பிரதான வளாகத்திலிருந்து திருநெல்வேலியில் தனக்கான புதிய கட்டடத்தொகுதியை அமைத்துக்கொண்டுள்ளது. இப்பீட வளர்ச்சியில் முன்னாள் பீடாதிபதிகளான பேராசிரியர்கள் எம்.நடராஜசுந்தரம், கே.தேவராஜா, ரி.வேல்நம்பி, பி.நிமலதாசன் ஆகியோரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இன்று பேராசிரியர் என்.கெங்காதரனின் தலைமையில் பீடம் வளர்ச்சிப் பாதையில் செல்கின்றது. இப்பீடத்திற்கு வருடாந்தம் 500 மாணவர்களுக்கு மேல் அனுமதிக்கப்படுகின்றனர்.


05

**பட்டப்பின்படிப்புகள் பீடம்**

இப்பீடம் 1999ஆம் ஆண்டு மே மாதம் வெள்ளிவிழா ஆண்டில் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளையால் ஆரம்பிக்கப்பட்டது. இப்பீடம் பல்கலைக்கழகத்தின் சகல கல்வித்துறைகளினதும் பட்டப்பின் படிப்பை மேற்கொள்கின்றது. இப் பீடத்தின் கீழ் குறிப்பாக சுய நிதியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வியில் முதுமாணி, கல்வியில் ஆய்வுப் பட்டங்களான முதுதத்துவமாணி, கலாநிதி ஆகியன பெரியளவில் இடம்பெற்று வருகின்றன. வருடாந்தம் 200 இற்கு மேற்பட்டவர்கள் கல்வித்துறையில் பட்டம் பெற்று வெளியேறுகின்றார்கள். இப்பீட செயற்பாட்டில் கல்வித்துறை விரிவுரையாளர்கள் பெரும் பங்கு வகித்துள்ளனர்.

தமிழ், சைவசித்தாந்தம், பண்பாட்டியல், முகாமைத்துவம், பொது நிர்வாகம், பிராந்திய அபிவிருத்தி, கிறிஸ்தவ நாகரிகம், சூழலியல் மற்றும் மருத்துவ, விஞ்ஞானத் துறை போன்ற பாடங்களில் முதுமாணிக் கற்கைகள் இடம் பெறுகின்றன. இப்பீடம் பல்கலைக் கழக ஆராய்ச்சிப் படிப்புக்களை முன்னெடுக்க பல வசதி வாய்ப்புக்களை வழங்கிக்கொண்டிருக்கின்றது. இப்பீட வளர்ச்சியில் பீடாதிபதிகளாகவிருந்த பேராசிரியர்கள் ஏ.சண்முகதாஸ், எஸ்.கே.சிற்றம்பலம், எஸ்.கந்தசாமி, எஸ்.சத்தியசீலன், ஜி.மிகுந்தன், எஸ்.கண்ணதாசன் ஆகியோரின் சேவைகள் பாராட்டிற்குரியவை.

**இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்**

இப்பீடம் 2019 இல் ஆரம்பிக்கப்பட்ட போதும், மருத்துவ பீடத்தின் கீழ் 2006 முதல் கற்கை நெறிகள் நடைபெற்றுள்ளன. மருத்துவத்துறையின் கீழ் மருந்தாக்கவியலும், சமுதாய மருத்துவத் துறையின்கீழ் தாதியியலும், உயிர் இரசாயனவியல் துறையின் கீழ் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானக் கற்கையும் இடம் பெற்றிருந்தன. 2011 இல் இம் மூன்று கற்கைகளும் ஒரு நிர்வாக அலகின் கீழ் கொண்டு வரப்பட்டன. 2019 இல் இம் மூன்று கற்கை நெறிகளுக்குத் துறை அந்தஸ்து வழங்கப்பட்டு இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம் உருவாகியது. இப்பீடம் மருத் துவ பீடத்திற்கு அருகில் இருப்பதுடன் மருத்துவ பீடத்துடன் இணைந்து செயற்படுவதும் குறிப்பிடத்தக்கது. இதுவரை 13 அணி மாணவர்கள் இப்பீடத்தில் கற்று வெளியேறியுள்ளனர். திருமதி. தேவி தபோதரன் ஆரம்பத்திலி ருந்து இன்றுவரை பீடாதிபதியாக விருந்து கல்வி அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்கின்றார்.

**பொறியியற் பீடம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆரம்ப காலத்திலேயே பொறியியற்பீடம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1987இல் துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா இப்பீடத்தை அமைக்கும் நோக்குடன் நியமித்த பேராசிரியர் பி.நவரத்தினராசா சில முயற்சிகள் மேற்கொண்டபோதும், யுத்த நிலைகளால் முன்னேற்றம் காணப்படவில்லை. 2002 இல் மானிய ஆணைக்குழுத் தகவல் தொழில்நுட்பப் பொறியியற் பீடத்தை யாழ்ப்பாணத்தில் அமைக்க விரும்பியது. ஆனால் பல்கலைக்கழகப் பேரவை முழுமையான பொறியியற் பீடமே வேண்டும் எனக்கூறியது.

நீண்ட முயற்சியின் பின் துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தின் காலத்தில் 2013 இல் கிளிநொச்சி அறிவியல் நகரில் பொறியியற்பீடம் ஆரம்பமாகி முதல் மாணவர் அணி 2014 இல் அனுமதிக்கப்பட்டது. இப்பீடத்தில் நான்கு துறைகள் இருக்கின்றன. அவையாவன: குடிசார் மற்றும் சுற்றுப் பொறியியல், இலத்திரனியலும் மின்னியலும், கணனிப் பொறியியல், இயந்திரவியல் மற்றும் செயற்பாட்டுப் பொறியியல். பீடம் மிகக் குறுகிய காலத்தில் நவீன உட்கட்டமைப்பைக் கொண்டும், கல்வி நிலையிலும் மேன்மை நிலையை அடைந்தது.

இங்கிருந்து வெளியேறிய பட்டதாரிகளில் பலர் சிறந்த புலமைப்பரிசில் பெற்று பல நாடுகளுக்கு மேற்படிப்பிற்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலைக்கு பீடாதிபதிகளான பேராசிரியர்கள் ஏ.அற்புதராசாவும், கே.பிரபாகரனும் பெரும் பங்காற்றியுள்ளனர். இப்பீடத்திற்கு வருடாந்தம் 200 மாணவர்களுக்குமேல் அனுமதிக்கப்படுகின்றனர்.

**தொழில்நுட்பவியல் பீடம்:**

இப்பீடம் 2014 இல் அன்றைய துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் காலத்தில் நிறுவப்பட்டது. இப்பீடத்தின் ஆரம்ப நிலையில் பீடாதிபதியாக பேராசிரியர் சிறிசற்குணராசா நியமிக்கப்பட்டார். இவர் இப்பீடத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டார். இப்பீடம் உயிர் முறைத் தொழில்நுட்பம், பொறியியல் முறைத் தொழில்நுட்பம் ஆகிய இரு துறைகளைக் கொண்டுள்ளது. மேலும் விசாலமான நவீன உட்கட்டமைப்புக்களையும் நவீன ஆய்வுகூட வசதிகளையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நீண்ட காலமாக பேராசிரியர் சி.சிவமதி சிவச்சந்திரன் பீடாதி பதியாக விருந்து பீடத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றி வருகின்றார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆளுநர் செயலகத்தின் ஊடக அறிக்கை பிரதம ஆசிரியரின் தன்னிலை விளக்கம்



கடந்த 18.03.2024 அன்று வலம்புரியில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் வடக்கு மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆளுநரின் உத்தரவுக்கு அமைய, வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கணக்காளர் அண்ணாமலை கலைச்செல்வன் அந்த முறைப்பாட்டை பதிவு செய்திருந்தார்.

இது தொடர்பில் கடந்த 22.04.2024 அன்று வலம்புரியின் பிரதம ஆசிரியர் ஆகிய என்னை காலை 10.00 மணியளவில் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து என்னிடம் வாக்குமூலம் பெறப்பட்டதுடன் விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது.

இவ் விசாரணையின் போது கணக்காளர் அண்ணாமலை கலைச்செல்வனும் பிரசன்னமாகியிருந்தார்.

வலம்புரி பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்திற்காக பிரதம ஆசிரியரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரித்தமை தொடர்பில் பத்திரிகைகள், சமூக வலைத்தளங்கள், ஊடக அமைப்புகள், அரசியல் தரப்புகள் தமது பலத்த கண்டனத்தை வெளியிட்டிருந்தன.

இதில் யாழ்.ஊடக மையம், மின்னியல் பத்திரிகையான காலை முரசு ஆகியன காட்டமான கண்டனத்தை அறிக்கையாகவும் ஆசிரியர் தலையங்கமாகவும் வெளியிட்டு இருந்தன.

எனினும் இது தனிப்பட்ட வலம்புரி ஆசிரியருக்காக வெளியிடப்பட்டதன்று.

மாறாக, ஊடக சுதந்திரத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடாது, கருத்துச் சுதந்திரத்திற்குப் பங்கம் ஏற்பட்டு விடலாகாது என்பதற்காகவே பொறுப்பு வாய்ந்த ஊடக அமைப்புகள் தமது பணியைச் செய்தன.

தவிர, வலம்புரி நாளிதழின் பிரதம ஆசிரியரிடம் நடத்தப்பட்ட விசாரணை மற்றும் அவர் வழங்கிய வாக்குமூலம் என்பன எந்த வித திரிவுபடுத்தலும் இன்றி வலம்புரி நாளிதழில் முன்பக்கச் செய்தியாக வெளியிடப்பட்டிருந்தது.

சம்பவம் இதுவாக இருக்கையில், குறித்த விடயத்துக்கு விளக்கம் கொடுப்பது போன்று வடக்கு ஆளுநர் செயலகம் 23.04.2024 அன்று இரவோடு இரவாக ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு இருந்தது.

அந்த அறிக்கையில், பிரதம ஆசிரியராகிய எனது பெயரைக் குறிப்பிட்டு, எந்தவிதமான நயத்தக்க நாகரிகமும் பின்பற்றப்படாமல், அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையை நேற்றைய தினம் (25.04.2024) வலம்புரியின் முன்பக்கத்தில் வெளியிட்டிருந்தோம்.

அந்த அறிக்கையில், தனிப்பட்ட விடயங்களை ஊடகங்களின் துணைகொண்டு சாதித்துக் கொள்ள நினைப்பது நீதியான செயலல்ல எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இங்குதான் வடக்கு ஆளுநர் செயலகத்தின் சிறுமைத்தனம் தெரிகிறது. அதாவது எனக்கு எதிராகச் செய்த முறைப்பாட்டுக்கு ஊடக சமூகத்தின் எதிர்ப்புக் கிளம்பியதும் அதனைத் திசை திருப்புவதற்காக, எனது கடமை நிறைவேற்று அதிபர் பதவியையும் குறித்த ஆசிரியர் தலையங்கத்தையும் தொடர்புபடுத்தி அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

கௌரவ ஆளுநர் அவர்கள் தனக்கும்; குறித்த பொலிஸ் முறைப்பாட்டிற்கும் குறித்த ஊடக அறிக்கைக்கும் எந்தவித தொடர்பும் இல்லாதது போல காட்டிக் கொள்ள முற்பட்டு இருப்பது தான் மிகுந்த அதிர்ச்சியைத் தருகிறது.

இது விடயத்தில் ஆளுநருக்குத் தொடர்பு இல்லையாயின், ஆளுநர் செயலகத்தை இயக்குவது யார்? இந்த அறிக்கையைத் தயாரித்தது யார்? குறித்த அறிக்கை ஆளுநருக்குத் தெரியாமல் விடப்பட்டதா? என்ற கேள்விகள் எழவே செய்யும்.

தவிர, குறித்த அறிக்கையில் ஆளுநர் செயலகத்தால் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே; பொலிஸாரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றும் இதற்கும் கௌரவ ஆளுநருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.




ஆனால், பொலிஸ் விசாரணையின் போது, ஆளுநரின் கௌரவத்திற்குப் பங்கம் ஏற்பட்டதற்காக கணக்காளர் முறைப்பாடு செய்கின்ற நடைமுறை உண்டா? என நான் கேள்வி எழுப்பினேன்.

அதன் போது ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமையவே நான் பொலிஸில் முறைப்பாட்டை செய்தேன் என கணக்காளர் கலைச்செல்வன் குறிப்பிட்டிருந்தார். இப்போது, தான் கூறியதை கணக்காளர் மறுக்க நேரிடலாம்.

ஆனால் அவர் செய்த பொலிஸ் முறைப்பாட்டில், ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய குறித்த முறைப்பாட்டை பதிவு செய்கிறேன் என்ற வாசகம் உண்டு என்பதை இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இவை ஒருபுறம் இருக்க, கடமை நிறைவேற்று அதிபராக 15 வருடங்கள் கடமையாற்றிய இவர் பல தடவைகள் அதிபர் சேவை போட்டிப் பரீட்சை நடந்த போதிலும் அந்தப் பரீட்சையில் அவர் சித்தி அடையவில்லை என்றும் கடமை நிறைவேற்று அதிபர்கள் சிலரும் சித்தியடையத் தவறினர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் ஒரு பெரும் அரச சபை, ஜனநாயகத்தைக் காத்தருள வேண்டிய உயர் சபை, அந்தச் சபையில் இந்த அளவு தூரம் ஈனத்தனம் மலிந்துகிடக்கிறது என்பதை நினைத்தபோது உண்மையிலேயே இதயம் நொந்து கொண்டது.

சத்தியமாகச் சொல்கிறேன் ஆசிரியர் தலையங்கத்தை எழுதத் தொடங்கி 25 வருடங்கள் நிறைவாகின்றன. தர்மத்தையும் நீதியையும் நிலை நாட்ட வேண்டுமென என் நெஞ்சுக்கு நீதியாக எழுதினேன்.

ஆனால், வடக்கு ஆளுநர் செயலகத்தில் ஒரு விதுரன் இருந்திருந்தால் கூட, நீங்கள் குறிப்பிடுவது பச்சைப் பொய்யென்று சுட்டிக் காட்டி இருப்பார். ஆம், பல தடவைகள் அதிபர் போட்டிப்பரீட்சை நடந்ததென்று ஓர் ஆளுநர் செயலகம் குறிப்பிட விளைகிறது என்றால், அந்த செயலகத்தின் ஆற்றல், திறன் எப்படி என்பதை புரிதல் யாருக்கும் கடினமன்று.

இலங்கை அதிபர் போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை 2006, 2015, 2019 ஆகிய மூன்று ஆண்டுகள் நடைபெற்றன.

2006 ஆம் ஆண்டு அதிபர் பரீட்சை நடைபெற்ற வேளை நான் யாழ்.பல்கலைக்கழக ஊடகங்கள் பயிற்சி மையத்தில் தற்காலிக விரிவுரையாளராகக் கடமையாற்றி இருந்தேன். அதன் காரணமாக அந்த பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லை.

இருந்தும் அந்த பரீட்சையானது அதிபர் தரம்-II அதிபர் தரம்-III என சேவை மூப்பின் அடிப்படையில் நடைபெற்றது. அந்த நடைமுறை அதற்கு முன்பும் இருந்தது.

இந்த பரீட்சையில் தோற்றிய அனைவரும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு, நேர்முகப் பரீட்சைக்கும் புள்ளிகள் கொடுக்கப்பட்டு நியமனம் வழங்கப்பட்டது.

நிலைமை இதுவாக இருக்க, தற்காலிக விரிவுரையாளருக்கான நியமனக்காலம் முடிவுற்றதும் 2009 ஆம் ஆண்டு கடமை நிறைவேற்று அதிபராக திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தால் நியமிக்கப்பட்டேன். இதன் பின்னர் 2015 ஆம் ஆண்டு அதிபர் பரீட்சை இடம் பெற்றது. இப்பரீட்சை புதிய அதிபர் சேவை பிரமாணங்களின் அடிப்படையில் சிரேஷ்ட, கனிஷ்ட என்ற வேறுபாடு இன்றி, அதிபர் தரம் III சேவைக்கு மட்டுமான போட்டிப் பரீட்சையாக இடம் பெற்றது. இதில் இளம் ஆசிரியர்கள் பலர் பரீட்சையில் களமிறங்கிய போது, அவர்களின் வேகம் சிரேஷ்ட ஆசிரியர்களை பரீட்சை பெறுபேற்றில் இருந்து பின்தள்ளியது.

இதுவே கடமை நிறைவேற்று அதிபர்கள் சித்தி அடைய முடியாமல் போனமைக்கான காரணம்.

இப் பரீட்சையில் நான் தோற்றி 120 என வரையறுக்கப்பட்டிருந்த சித்திக்கான புள்ளிகளைப் பெற்றிருந்த போதும் மூன்று பாடங்களிலும் 40 புள்ளிகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை நிறைவேற்றாததால் அந்தப் பரீட்சையில் சித்தி அடையவில்லை. (தேவை ஏற்படின் அதனை ஆதாரப்படுத்த முடியும்.)

தவிர, 2019 ஆம் ஆண்டு அதிபர் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டபோது வயதெல்லை 50 என வரையறுக்கப்பட்டு இருந்ததன் காரணத்தால், அந்தப் பரீட்சைக்கு என்னால் விண்ணப்பிக்க முடியாமல் போனது. இதுவே உண்மையாக இருக்க, வடக்கு மாகாண ஆளுநர் செயலகம், பல தடவைகள் நடந்த அதிபர் பரீட்சையில் சித்தியடையத் தவறியவர் எனக் குறிப்பிட்டுள்ளது.

கௌரவத்திற்குரிய ஆளுநர் அவர்களே! நிறைந்த பிள்ளைகளின் தாயாக இருக்கக்கூடிய நீங்கள், உங்கள் மாகாணத்துக்கு உட்பட்ட பொதுமக்களை உங்கள் பிள்ளைகள் போல, சகோதரர்கள் போல நினைத்திருப்பீர்களாயின், பல தடவை போட்டிப் பரீட்சையில் தோற்றி சித்தியடையத் தவறியவர் என்ற அபாண்டமான பொய்யை ஆளுநர் செயலகம் தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்ட போது அதை எப்படி அனுமதித்தீர்கள்?

கௌரவ ஆளுநர் அவர்களே! யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திறமைக்குரிய புலமைப் பரிசிலைப் பெற்று பட்டப்படிப்பை மேற்கொண்டவன் யான்.

திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையை திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயமாகப் பெயர் மாற்றம் செய்தோம்.

பரமேஸ்வராக் கல்லூரி யாழ். பல்கலைக்கழகமாக மாற்றப்பட்ட பின்னர், பரமேஸ்வராக் கல்லூரி இல்லாமல் போனதே என்ற கவலை நம் மக்களிடமிருந்தது. மீளவும் பரமேஸ்வராக் கல்லூரியை உருவாக்க வேண்டுமென எம்பெரியவர்களும் புத்திஜீவிகளும் பல்வேறு முயற்சிகளைச் செய்தனர். இருந்தும் அது கைகூடவில்லை.

ஆனால் திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையை பரமேஸ்வரா வித்தியாலயமாக மாற்றுவதன் மூலம் இல்லாமல் போன பரமேஸ்வராக் கல்லூரியை இட்டுநிரப்ப முடியுமெனக் கருதினோம். அதற்காக நாம் பட்ட பாடுகள் கொஞ்சம் அல்ல.

தவிர, மூடப்படவிருந்த யாழ். கலட்டி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் 2023 ஆம் ஆண்டு, தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் 50 வீத சித்தியை பெற்று யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் எமது பாடசாலையை மூன்றாம் இடத்தில் நிறுத்தினோம்.

முதலாம் இடம் யாழ். பொஸ்கோ வித்தியாலயம். இரண்டாம் இடம் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. மூன்றாமிடம் யாழ்.கலட்டி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை.

இச்சிலவற்றைக் கூறுவது எம் புகழ் பாடுவதற்கானதல்ல. உங்களின் புரிதலுக்கானது.

எல்லாவற்றுக்கும் மேலாக, தங்களுக்கு அவசர கடிதமாக எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கம் இன நல்லிணக்கத்திற்குப் பாதகமாக அமைகிறது என ஆளுநர் செயலக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுகண்டு நாம் திகைத்துப்போனோம்.

வடக்கு மாகாணத்தின் ஆளுநராக ஒரு சிங்களவர் இருந்தால் அவர் தனது உச்சமான சேவையை வழங்கியிருப்பார் என ஆசிரியர் தலையங்கத்தில் நாம் முன்வைத்த கருத்தை வடமாகாண ஆளுநர் செயலகம் இனவாதக் கருத்தாகப் பார்க்கிறது என்பது தான் எம் அதிர்ச்சிக்கு காரணமாயிற்று.

சிங்களவர் ஒருவர் தமிழர் பிரதேசத்தில் ஆளுநராக இருப்பது உகந்தது என்ற கருத்து, இன ஒற்றுமைக்கானது. இந்தப் புரிதல் கூட, இந்த அறிக்கையைத் தயாரித்த ஆளுநர் செயலகத்திடம் இல்லாமல் போனமை குறித்து ஆணைக்குழு நியமித்தே விசாரணை நடத்தப்பட வேண்டும்.

பரவாயில்லை. இதிலிருந்து ஆளுநர் செயலகம் என் மீது அரசியல் பழிதீர்க்கத் திட்டம் தீட்டியுள்ளது என நாம் கருதுவதற்கு இடமளிக்கிறது. இதனை இன்னும் ஆதாரப்படுத்துவதாக; வலம்புரி ஆசிரியர் ஓர் அரச பணியாளர். அவர் மீது திணைக்களமட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காகவே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என ஆளுநர் செயலக அறிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள விடயம் அமைகிறது.

இங்கு, ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு முன்னதாக பொலிஸில் முறைப்பாடு செய்கின்ற நடைமுறையை ஆளுநர் செயலகம் தேவை ஏற்பட்ட போதெல்லாம் செய்துள்ளதா? என்ற தகவல்களும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

எது எவ்வாறாயினும் வடக்கு மாகாணத்தின் சமகால நிலைமைகள் தொடர்பில் அதீத கவனம் செலுத்துங்கள் என எழுதிய ஆசிரியர் தலையங்கத்தை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுடன் தொடுத்து, ஆளுநர் செயலகம் தயாரித்த அறிக்கை நாடகம் அற்புதம்.

கடமை நிறைவேற்று அதிபர் பதவி முடிவுறுத்தப்படுவதற்கு எதிராக ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டதாகக் கூறும் கற்பனை கண்டு வியந்தோம்.

இறுதியாக, ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறோம். அதிபர் பதவியைத் தக்கவைக்க நினைத்திருந்தால், எங்கள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரை சந்தித்து நிலைமையை எடுத்துக் கூறியிருப்பேன்.

ஆனால் அதனை நான் ஒருபோதும் செய்யவில்லை. செய்யவும் மாட்டேன்.

செயலாளர் எடுத்த ஒரு நடவடிக்கை, என்னால் தடைப்படுவதை - அதற்குள் சலுகைபெற முற்படுவதை நான் ஒருபோதும் விரும்ப மாட்டேன்.

அதேநேரம் வடக்கு மாகாணத்தில், கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டது என்பதையும் மறுதலிக்க முடியாது.

வடமாகாணத்தின் கடமை நிறைவேற்று அதிபர்கள் யுத்தத்தால் அழிந்துபோன பாடசாலைகளை மீளக்கட்டியமைத்து அதனை இயக்கியவர்கள். அதிபர்கள் போக மறுத்த இடங்களில் உள்ள மாணவர்களுக்காக தங்களை அர்ப்பணித்தவர்கள். ஆனால் அவர்கள் மீது வடக்கு மாகாண நிர்வாகத்திற்கு இத்துணை காழ்ப்புணர்வு ஏற்பட்டது ஏன்? என்பதுதான் புரியவில்லை. ஆயினும் அது இன்னொரு அத்தியாயம் என்பதால், அதனை இதற்குள் புகுத்த யாம் விரும்பவில்லை.

ஆளுநர் செயலகத்தின் ஊடக அறிக்கையின் இறுதிப் பகுதியில்; நிர்வாகச் சமநிலையைச் சீர்குலைக்கும் வகையிலும் இன - மதங்களுக்கு இடையில் பங்கம் ஏற்படும் வகையிலும் நான் செயற்பட்டுள்ளதாக ஆளுநர் செயலகம் கருதுகிறதாம்.

இங்கு மத நல்லிணக்கத்துக்கு நாம் பங்கம் விளைவிப்பதாக முன்வைக்கப்பட்ட ஆளுநர் செயலகத்தின் கருத்தை வணக்கத்துக்குரிய சமயத் தலைவர்களின் அவதானிப்புக்காக விட்டு விடுகின்றோம்.

நல்லது. கடமைநிறைவேற்று அதிபரில் தொட்டு, பரீட்சையில் சித்தியடையவில்லை எனப் பகிரங்கப்படுத்தி, ஈற்றில் இன-மத நல்லிணக்கத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு உள்ளார் எனக் கருதுகின்ற அளவுக்கு ஆளுநர் செயலகம் முடிவெடுத்துள்ளது.

ஆக, ஆளுநர் செயலகம் எந்தக் கோணத்தில் கருதுகிறதோ! அந்தக் கருத்தியல் சரியா? என்பதை இந்த நாட்டின் மக்கள் சமூகமும் சட்டமும் நீதித்துறையும் தீர்மானிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு என்பதை மட்டும் அறிக்கையாளர்களுக்கு இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். மற்றும்படி இத்தன்னிலை விளக்கம் எவரது கௌரவத்துக்கும் நிர்வாகத்துக்கும் பங்கம் ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசொகுசு ஹோட்டல் திறந்து வைத்தார் ஜனாதிபதி



(கொழும்பு)

கொழும்பு காலிமுகத்திடலிலுக்கு அருகில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ள ITC ரத்னதீப் அதி சொகுசு நட்சத்திர ஹோட்டல் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கு சுமார் 3,000 கோடி இந்திய ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு கட்டடங்களாக கட்டப்பட்டிருக்கும் இந்த ஹோட்டலில், முதல் கட்டடம் 30 அடுக்கு ஹோட்டலாகவும், இரண்டாவது கட்டடம் 50 அடுக்குமாடி குடியிருப்புஎனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரையிலிருந்து சுமார் 100 மீற்றர் உயரத்தில் இந்த இரண்டு கட்டடங்களையும் இணைக்கும் வகையில் 55 மீற்றர் நீளமான 'ஸ்கை ப்ரிட்ஜ்' எனப்படும் வான் பாலம் கட்டப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சம் என தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)

# சம்பந்தனுக்கு சம்பளத்துடன் 3 மாத கால விடுமுறை

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு சம்பளத்துடன் கூடிய 3 மாதகால விடுமுறை வழங்க பாராளுமன்றில் முன்மொழியப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஸ்மன் கிரியெல்ல முன்வைத்த யோசனைக்கு அமைவாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் இரா.சம்பந்தன் சுகயீனமுற்றிருப்பதால் விடுமுறை வழங்குமாறு லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்த நிலையிலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 80 | 100-150 | 120 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 140 | 155 | 200 |
| பச்சைமிளகாய் | 120 | 80 | 100 | 80-100 | 120 |
| தக்காளி | 100 | 80 | 70 | 100-160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100-140 | 150 |
| கோவா | 160 | 160 | 150 | 150 | 250 |
| கரட் | 300 | 300 | 280 | 260 | 350 |
| பூசணி | 120 | 120 | 80 | 100 | 150 |
| புடோல் | 100 | 200 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 100 | 90 | 50 | 80-100 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 300 | 250-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 320 | 250 | 220 | 300 |
| பாகற்காய் | 500 | 300 | 300 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 120 | 60 | 100-120 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | -- | 150 |
| பயற்றங்காய் | 400 | 200 | 250 | 150-200 | 180 |
| லீக்ஸ் | 320 | 280 | 220 | 200 | 250 |
| பீற்றூட் | 150 | 200 | 180 | 250 | 250 |
| கறிமிளகாய் | 250 | 300 | 200 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 1000 | 650 | 400 | 400-700 | 800 |
| போஞ்சி | 200 | 300 | 300 | 220 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | 50 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 100 | 80-100 | 100 |
| தேசிக்காய் | 800 | 800 | 500 | 500-800 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 110 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 300 | 250 | 400 |
| வெங்காயப்பூ | -- | 650 | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 80-100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 90 | 70-80 | 60 |
| வல்லாரை | 60 | 120 | 50 | 70-80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 120 | 100 | -- |

# இன்று ஒரு தகவல் 106



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கொப்பர் நிக்கலஸ்

1543 ஆம் வருடம் மே மாதம் 24 ஆம் திகதி. அதாவது இன்றைக்கு கிட்டத்தட்ட 450 வருடத்திற்கு முன்பு ஒரு நாள். குதிரை மேலே ஒரு ஆளு வேகமாக வந்து கொண்டு இருக்கின்றான். ஜேர்மனியிலே இருக்கின்ற நூரம்பர்க் என்கின்ற ஊரிலேயிருந்து அவன் புறப்பட்டு வந்து கொண்டு இருக்கிறான். நேராக போலந்திலே இருக்கின்ற பிரான்பர்க் என்கின்ற ஊருக்கு வந்து சேருகின்றான். அவன் முகத்திலே ஏதோ ஒரு அவசரம் தெரிகிறது அவன் கையிலே ஒரு புத்தக மூட்டை. அந்த ஊரிலே ஒரு மடாலயம் அதற்கு முன்பாக கொண்டு போய் குதிரையை நிறுத்தி விட்டு கீழே குதிக்கின்றான்.

வேகமாக ஓடிப்போய் கதவைத் தட்டுகிறான். கதவைத்திறக்கிறார்கள் உள்ளே ஓடுகிறான். இவன் கையிலே இருக்கே புத்தகம் அதை எழுதின அறிஞர் உள்ளே மரணப் படுக்கையில் இருக்கிறார். தன் காலத்தின் கடைசி வினாடிகளை எண்ணிக்கொண்டிருக்கிறார். மயக்க நிலையிலேயிருந்து அவரோட கையிலே அந்த புத்தகத்தோட முதல் பிரதியை வைக்கின்றான். அதன் பிறகு கொஞ்ச நேரத்திலே அவருடைய மூளையிலே இரத்தக் கசிவு ஏற்பட்டு இறந்து போகிறார். அந்தப் புத்தகம் என்ன தெரியுமா? தலைப்பு இது தான் Concerning the revolurtions of the heavenly bodies வான் பொருள்களின் சுற்றோட்டம் பற்றிய ஆய்வுகள்.

இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றி அது வரைக்கும் மனிதன் என்னென்ன கற்பனைகள் செய்து வைத்திருந்தானோ அது வெல்லாம் தப்பு என்று சொன்ன நூல். நவீன அறிவியலுக்கு வழி காட்டினதே அந்த நூல் தான். கிட்டத்தட்ட 300 வருடத்திற்கும் மேலாக அறிவியலுக்கும் மதவியலுக்கும் இடையிலே கடுமையான சர்ச்சையை எற்படுத்தின நூல் அது. ஏன் என்றால் அது வரைக்கும் சொர்க்கம் என்று ஒன்று ஆகாயத்திலே நிஜமாகவே இருக்கிறதாக எல்லோரும் நம்பிக் கொண்டு இருந்தார்கள்.

ஆனால் இவர் என்ன சொன்னார் என்றால். சூரியன் தான் இந்தப் பிரபஞ்சத்திலே அசையாத மையம் பூமியும் கோள்களும் அதைச் சுற்றி ஓடிக் கொண்டு இருக்கின்றது என்றார். அதனாலே புராணமும் வேத நூல்களும் சொல்லிவிட்டுப் போயிருக்கின்ற கருத்துக்களை எல்லாம் இவர் பொய்யாக்கினார். இந்தப் பிரபஞ்சத்திலே பூமி இருக்கின்ற இடம் எது என்று கண்டுபிடித்த அந்த அறிஞர் யார் தெரியுமா? அவர் தான்; நிகோலஸ் கோப்பர் நிக்கஸ். மதவாதிகள் அறிவியலுக்குப் போட்டிருந்த தடைகளையெல்லாம் தகர்த்தெரிந்தவர் அவர். இதிலே ஒரு ஆச்சரியம் என்ன தெரியுமா? அவரே ஒரு பக்தியுள்ள மதவாதி. 70 வருட காலமாக மடாலயத்திலேயே இருந்தவர். தொலைநோக்கி கூட இல்லாமலே தன்னுடைய வானியல் ஆர்வத்தை மட்டுமே துணையாக வைத்துக் கொண்டு இவ்வளவு பெரிய சாதனையை நிகழ்த்தியிருக்கின்றார் என்றால் அது ஆச்சரியம் தானே! அவர் காலத்திலே தொலை நோக்கியே கண்டுபிடக்கப்படவில்லை அவராகவே சில கருவிகளைத் தயார் செய்து இருக்கிறார். அப்போது எல்லாம் சூரியன் தான் பூமியை சுற்றி வந்து கொண்டு இருக்கிறது என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இவர் தன்னுடைய ஆராய்ச்சி முடிவுகளை 400 பக்கம் உள்ள ஒரு நூலாக எழுதி வைத்தார். அப்பவே நூலாக அதை வெளியிட வேண்டும் என்று சில பேர் வற்புறுத்தினார்கள் இருந்தாலும் கோப்பர் நிக்கஸ் அதற்கு சம்மதிக்கவில்லை. ஏன் என்றால் அதிலே இருக்கிற கருத்துக்கள் எல்லாம் புரட்சிகரமாக உள்ளது. முழுமையாக அதையெல்லாம் நிரூபிக்கிறதுக்கு இப்போது போதுமான சான்றுகள் இல்லை. இப்போது அதை வெளியிட்டால் எல்லோரும் கிண்டல் செய்வார்கள். என்பதை அவர் நன்றாக புரிந்து வைத்திருக்கிறார்.

1539 இல் ஒரு இளம் கணிதப் பேராசிரியர் (Georg Joachim Rheticus) கொப்பர் நிக்கலசை சந்தித்தார். அவருடைய கருத்துக்களை இரண்டு வருடமாக பரிசீலனை செய்தார். அதை தொகுத்து எழுதினார் வெளியிட்டார். முதல் அறிக்கை.......... என்று பேரு. அதற்கு அந்த நூலுக்கு ஓரளவுக்கு ஆதரவு இருந்தது. ஏன் என்றால் பல பேராலே அதை புரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. அதனாலேயே ஒன்றும் மறுப்பு சொல்லாமலே இருந்து விட்டார்கள்.

அதன் பிறகு இவருக்கு கொஞ்சம் தைரியம் வந்தது. முழு நூலையும் அச்சடித்து வெளியிடுவதற்கு அந்தப் கணிதப் பேராசியருக்கே அனுமதி கொடுத்தார். ஆனால் புத்தகம் வெளிவருவதற்கு ஆறு மாதத்திற்கு முன்பு அவருக்கு இதயதத் தாக்குதல் வந்துவிட்டது. தன்னுடைய நூல் அச் சாதனத்தை பார்க்க வேண்டும் என்பதற்காகத் தான் அவர் கடைசி நேரத்திலே உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டிருந்தார். அதே முதல் மாதிரி பிரதியை கொண்டு போய் அவருடைய கையிலே வைத்தார்கள். அதை உணர்ந்தாரா இல்லையா என்பதே தெரியவில்லை. ஏன் என்றால் அதன் பிறகு அவருடைய கண்ணையே திறக்கவில்லை. இருந்தால் என்ன அவருடைய கருத்துக்கள் தான் இன்றைக்கு பல பேரோட கண்களைத் திறந்து விட்டு இருக்கிறதே! பூமி சூரியனைச் சுற்றுவதைப் பற்றி புத்தகம் எழுதின கதையைக் இதுவரைக்கும் கேட்டீர்கள்.

பூமி ஏன் சுற்றுகிறது? என்று தத்துவப் புத்தகம் எழுதினவர் கதை தெரியுமா? உங்களுக்கு! இருவரும் ரொம்பக் கஷ்ரப்பட்டு அங்கே இங்கே கடனை உடனை வாங்கி சொந்தமாகவே புத்தகத்தை வெளியிட்டர். ஏன் என்றால் மற்றவர்கள் யாரும் அதை வெளியிடத் தயாராக இல்லை. ஒரு வருடத்திற்கு பிறகு மவுண்ட் றோட்டில அவரைப் பார்த்தேன் என்ன சார் செய்து பண்ணிக்கிட்டு இருக்கிறீங்க? பூமி ஏன் சுற்றுகிறது எப்படி போய்க் கொண்டு இருக்கிறது? என்று கேட்டேன்.

சார் அந்தப் புத்தகம் ஒன்று கூட விற்கவில்லை. சார் எல்லாத்தையும் வீட்டுக்குள்ளே அடுக்கி வைத்திருக்கிறேன். மனைவிக்கிட்டே சண்டை வேற. ஜனங்கள் என்னைப் புரிந்து கொள்வதற்கு நாளாகும் போலே இருக்கிறது. இருந்தாலும் இப்போது இன்னொரு புத்தகம் எழுதிக் கொண்டிருக்கின்றேன் சார். சொந்த அனுபவத்தை வைத்து என்றார்.

இது பேரு என்ன சார்? என்றேன். இதற்கு தலைப்பு தலை ஏன் சுற்றுகிறது? என்று வைத்திருக்கிறேன் என்றார். அதைக் கேட்டதும் முதல் பிரதியை நானே வாங்கிக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து விட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய

# வருடாந்த பொங்கல் தொடர்பான கலந்துரையாடல்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா மே மாதம் 20 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ள நிலையில் ஆலய திருப்பணி வேலைகளை மேற்கொள்ளும் பொருட்டு முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் தலைமையில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் மாவட்ட பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி. ம.உமாமகள், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி, வைத்தியர்கள், முல்லை வலயக் கல்வி பணிமனையின் உதவிப் பணிப்பாளர், மின்சாரசபையின் அதிகாரிகள், கலாசார உத்தியோகத்தர்கள், ஆலய நிர்வாகத்தினர், முல்லைத்தீவு மாவட்ட இராணுவ அதிகாரி, மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி, மாவட்டத்தின் முப்படை அதிகாரிகள், ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வைகாசி மாதம் 6ஆம் திகதி திங்கள் பாக்குத் தெண்டல் நிகழ்வும் 13ஆம் திகதி திங்கள் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வும் 20 ஆம் திகதி வைகாசிப் பொங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-299)




# காலாவதியான அரிசி பொதிகள் வழங்கி வைப்பு

## மக்கள் விசனம்

(நெளுக்குளம்)

அரச மானிய நிகழ்ச்சித் திட்டம் மூலம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு கலாவதியான அரிசி பொதி வழங்கப்பட்டுள்ளது.

அரச மானியம் நிகழ்சிதிட்டத்தின் கீழ் தற்போது மக்களுக்கு அரிசி பொதி வழங்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் மக்களுக்கு வழங்கப்பட்ட அரிசி பொதியில் 2024.03.25 என காலாவதி திகதி அச்சிடப்பட்டிருப்பதோடு வழங்கப்பட்ட குறித்த பொதி அரிசியும் பழுதடைந்த நிலையிலேயே இருப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி ம.உமாமகளிடம் தொடர்பு கொண்டு வினவிய போது, நேற்று முன்தினம் வழங்கப்பட்ட அரிசி பொதிகள் சில காலாவதியானதாக முறைப்பாடு கிடைக்கப் பெற்றிருந்தது. அதனையடுத்து அரிசி வழங்கப்பட்டவர்களின் தரவுகளை பெற்று மீண்டும் அவர்களுக்கு தரமான அரிசி பொதிகள் வழங்கப்படும் என தெரிவித்தார். (நி-6-299)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுப்பு

(குருமன்காடு)

வவுனியா பொலிஸாரால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை புதிய பேருந்து நிலையப் பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய சமுதாய பொலிஸ் குழுவால் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் சமுதாய பொலிஸ் குழுவினரும் இதில் கலந்து கொண்டு டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதில் புதிய பேருந்து நிலையம், கண்டி வீதியோரம் என்பவற்றில் வீசப்பட்டிருந்த போத்தல்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் என்பன அகற்றப்பட்டதுடன், நீர் வடிகால்களும் சுத்தம் செய்யப்பட்டது. (நி-6-250)

# புதுவருட கலாசார விளையாட்டு விழா நாளை கிளிநொச்சி மாவட்டத்தில்

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தின் 4 பிரதேச செயலகங்களில் முன்னெடுக்கப்படவுள்ள புதுவருட கலாசார விளையாட்டு விழா தொடர்பாக தெளிவூட்டும் ஊடக சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கிளிநொச்சி சேவை மன்றத்தில் குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய 'ஸ்மார்ட் யூத்' எனும் தொனிப்பொருளில் புதுவருட கலாசார விளையாட்டு விழாவினை நாளை சனிக் கிழமை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள 337 பிரதேச செயலகங்களிலும் இந்த விளையாட்டு விழா நடத்தப்படவுள்ள நிலையில் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் பி.ப 2.30 மணிக்கு கனகபுரம் விளையாட்டு மைதானம், கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் மு.ப 9 மணிக்கு கண்ணகிபுரம் விளையாட்டு மைதானம், பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் மு.ப 9 மணிக்கு இரணைமாநகர் விளையாட்டு மைதானம் மற் றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் பி.ப 2.30 மணிக்கு தம்பகாமம் விளையாட்டு கழக மைதானத்தில் குறித்த விளையாட்டு விழா இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-100)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3099

**கதிரேஷ்**



- எதுவும் சாப்பிட கிடைக்காத நம் பெற்றோர்கள்...
- எது கிடைத்தாலும் சாப்பிட்ட நாங்கள்..
- எது கிடைத்தாலும் சாப்பிடாத நம் குழந்தைகள்..
- தலைமுறை

**வைசால்**

ஹலோ யாரு புள்ள புடிக்கிறவனா..? என்னது சாப்பிடாத புள்ளைகள புடிச்சிட்டு போயிருவீங்களா..




அம்மா சரிமா சரி.. நா சாப்பிடுறேன்...

**நமசியா**

ஏழு கழுத வயசானாலும்..



நைட் தனியா தூங்கும் போது வீட்ல ஒரு சொம்பு திடீர்னு விழுந்துட்டா, அவ்வளவு தான் உசுரே போயிருது...

**சுந்தர்**

அப்பாக்கள் பாசமாக இருந்தால்
அனாதை இல்லங்கள் இருக்காது.
மகன்கள் பாசமாக
இருந்தால்
முதியோர் இல்லங்கள்
இருக்காது
அம்மாக்கள் பாசமாக
இருந்தால்
சமுதாயத்தில் குற்றங்கள்
ஏதும் இருக்காது.
மனைவிமார்கள்
அமைதியாக இருந்தால்
ஆண்களுக்கு குறையே இருக்காது...



**யுவன்**

அட்ஜஸ்ட் பண்ணி வாழ்றது வாழ்க்கை'னு கல்யாணத்துக்கு முன்னாடி சொன்னாங்க..



ஆனா இந்த அளவுக்கு அட்ஜஸ்ட் பண்ண வேண்டி வரும்ன்னு எதிர்பாக்கலையே..

**சுவஸ்திகா**

நம்ம கூட பழகுறதுல முக்காவாசி விஷமா இருக்குதுங்க இல்லனா வேஷமா நடிக்குதுங்க..



ரெண்டுமே இல்லனா லூசா இருக்கு துங்க

எங்க இருந்து தான் வர்றாங்களோ...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்ததை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 465





அவள் அச்சமயம் வராதிருந்தால் இதற்குள் என் உயிர் பிரிந்திருக்கும். ஐயா! தங்களுக்குத் துரோகம் செய்ய வந்ததின் பலனை இங்கேயே அனுபவித்து விட்டேன். மறு உலகில் இதற்காக மறுபடியும் கடவுள் என்னைத் தண்டிக்கமாட்டார் என்றான்.

இளவரசர் அவன் குரலைக் கேட்டதும் முகத்தை உற்றுப் பார்த்தார். "ஆ! கலபதி!(அந்நாளில் சேனைத் தலைவனைத் 'தளபதி' என்று அழைத்ததுபோல் மரக்கலத் தலைவனைக் 'கலபதி' என்று அழைத்தார்கள்.) இது என்ன பேச்சு! இதெல்லாம் எப்படி நடந்தது? எனக்கு நீர் என்ன துரோகம் செய்வதற்காக வந்தீர்? அதை நான் நம்பவே முடியாது!" என்றார்.

"ஐயா! தங்கள் உத்தம குணத்தினால் அப்படிச் சொல்கிறீர்கள். பழுவேட்டரையர்களின் சொற்படி தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டு போக வந்தேன். இதோ கட்டளை!" என்று சொல்லி, மடியிலிருந்து ஓலை ஒன்றை எடுத்துக் கொடுத்தான் சாகுந் தறுவாயில் இருந்த கலபதி.

ஓலையைக் கண்ணோட்டமாக இளவரசர் ஒரு வினாடியில் பார்வையிட்டார்.

"இதில் உமது துரோகம் என்ன? சக்கரவர்த்தியின் கட்டளையைத்தானே நிறைவேற்ற வந்தீர்? அதையறிந்து நானே விரைந்து ஓடி வந்தேன். அதற்குள் இந்த விபரீதங்கள் எப்படி நேர்ந்தன? சீக்கிரம் சொல்லுங்கள்" என்றார்.

"சீக்கிரம் சொல்லத்தான் வேண்டும் இல்லாவிட்டால் அப்புறம் சொல்லவே முடியாது!" என்றான் கலபதி. பிறகு அவன் அடிக்கடி தட்டுத்தடுமாறிப் பின்வரும் வரலாற்றைக் கூறினான்.

சக்கரவர்த்தியின் கட்டளையைப் பெற்றுக்கொண்டு கலபதி இரண்டு கப்பல்களுடன் நாகபட்டினத்திலிருந்து கிளம்பினான். அந்த வேலை அவனுக்குப் பிடிக்கவில்லைதான். ஆயினும் சக்கரவர்த்தியின் கட்டளையை மீற முடியாமல் புறப்பட்டான். புறப்படும்போது பழுவேட்டரையர்கள் அவனிடம் கண்டிப்பாகச் சில கட்டளைகளை இட்டிருந்தார்கள். அதாவது இலங்கையை அடைந்ததும் தனியான இடத்தில் கப்பல்களை நிறுத்திக் கொண்டு, இளவரசர் எங்கே இருக்கிறார் என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். பிறகு அவரை நேரில் சந்தித்து, சக்கரவர்த்தியின் ஓலையைக் கொடுக்க வேண்டும். அதற்கு முன்னால் சேனாதிபதி கொடும்பாளூர் வேளாருக்கு இந்தச் செய்தி தெரியக் கூடாது. இளவரசரிடம் கட்டளையைக் கொடுத்த பிறகு அவராக வந்தால் சரி, இல்லாவிட்டால் பலவந்தமாகச் சிறைப் படுத்தியாவது கொண்டு வரவேண்டும். இவ்விதம் சொல்லித் தங்கள் அந்தரங்க ஆட்கள் சிலரையும் பழுவேட்டரையர்கள் கலபதியுடன் சேர்த்து அனுப்பினார்கள்.

கலபதி மனத்தில் பெரிய பாரத்துடனேயே புறப்பட்டு வந்தான். அவன் கீழிருந்த கப்பல் மாலுமிகளில் பலருக்கு எதற்காக இலங்கை போகிறோம் என்பது தெரிந்திருக்கவில்லை. இதனால் அவனுடைய மனவேதனை அதிகமாயிருந்தது. அவர்களிடம் எப்படிச் சொல்வது என்று தயங்கினான். கப்பல்களைத் தொண்டைமானாற்றின் முகத்துவாரத்தில் கொண்டு போய் நிறுத்திய பிறகு கலபதி இன்னும் சில மாலுமிகளோடு காங்கேசன் துறைக்குப் போனான். இளவரசர் அப்போது எங்கே இருக்கிறார் என்று விசாரித்து வருவதற்காகத்தான். தென்னிலங்கையின் உட்பகுதியில் இளவரசர் பிரயாணம் செய்து கொண்டிருப்பதாகக் காங்கேசன் துறையில் தெரிந்து கொண்டு திரும்பி வந்தான்.

கலபதி திரும்பி வருவதற்குள்ளே மாலுமிகளுக்கு விஷயம் தெரிந்து விட்டது. பழுவேட்டரையர்களின் அந்தரங்க ஆட்கள் சிலர் இருந்தார்கள் அல்லவா? அவர்கள் மூலம் பிரஸ்தாபம் ஆகிவிட்டது. கலபதி திரும்பி வந்ததும் மாலுமிகள் கூட்டமாகச் சேர்ந்துகொண்டு கலபதியிடம் கேட்டார்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஆத்திரம் அழிவைத் தரும்

அது ஒரு கிராமம். அது காட்டை ஒட்டிய வனப்பகுதி. பிராணிகளிடம் பிரியமுள்ள ஒருவன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் காட்டிற்கு வேட்டைக்கு போனான். அழகிய புள்ளிமான் ஒன்றை பிடித்து வந்தான்.



மானின் அழகில் மயங்கிய அவன் மாமிசத்திற்காக கொல்லவில்லை. வீட்டில் வளர்த்து வந்தான். ஒரு நாள் மான் மாயமாய் மறைந்து விட்டது. ஆனால் அது ஓடவில்லை. காணாமல் போய்விட்டது.

அவனுக்கோ ஆத்திரம். இந்த மானை யார் பிடித்து போயிருப்பார்கள். அவன் எங்கே இருந்தாலும் தேடி கண்டு பிடித்து பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் கோவமாக உருவெடுத்தது.

உடனே கடவுளை துதித்தான். கடவுளே எனக்கு தரிசனம் தா...! என்று

கடவுளும் வந்தார்...!

பக்தா என்னை அழைத்ததின் காரணம் என்ன? கடவுள் கேட்டார்.

அறிவாளி பக்தன் என்ன கேட்கணும். நான் ஆசையாய் வளர்த்த மானை யாரோ அபகரித்து சென்றுவிட்டார்கள். அந்த மான் எனக்கு வேண்டும் என்று தானே கேட்டிருக்க வேண்டும். ஆனால் அவன் கேட்கவில்லை. கோவம் கண்ணை மறைத்தது.

தெய்வமே நான் ஆசையாய் ஒரு மான் வளர்த்தேன். அந்த மானை காணவில்லை. அந்த மானை திருடியவன் யாராக இருப்பினும், அவன் முன்னே வரவேண்டும். அவனை என் கோவம் தீர அடிக்க வேண்டும்.

இது தான் பக்தன் கேட்ட வரம்.

வேண்டுவோருக்கு வேண்டும் வரம் தரும் கடவுள் பக்தனின் கோரிக்கைக்கு தயங்கினார்.

பக்தா.. உன் மானை திருப்பி தருகிறேன். அது காணாமல் போனதற்கு காரணமானவர் யார் என்று கேட்காதே.

இல்லை.. என் மனம் எவ்வளவு கலங்கி இருக்கிறது என்பது எனக்குத் தான் தெரியும். அதனால் அவனை பழிவாங்காமல் விடமாட்டேன், என்று பிடிவாதமாக கேட்டான்.

சரி.. நீ கேட்கும் வரத்தை தருகிறேன். பின்னால் என் மீது வருத்தப் படக்கூடாது.

வருத்தம் வராது.

சரி.. தந்தேன் வரம். உன் மானை திருடி சென்றவர் யாரோ, அவர் உன் பின்னால் நிற்கிறார். தண்டித்து கொள். வரத்தை தந்த கடவுள் மறைந்து விட்டார்.

பக்தன் திரும்பி பார்த்தான்.அங்கே நின்றது சிங்கம்.

பழிவாங்கும் கோவம் மறைந்தது. பயம் பிடித்து கொண்டது. கை கால் எல்லாம் நடுங்க தொடங்கியது. கண் மண் தெரியாமல் ஓடத் தொடங்கினான். கடவுளே என்னை காப்பாற்று.

கடவுள் சிரித்தார். ஆத்திரகரனுக்கு புத்தி மட்டுதானே. அவன் கதை முடிந்தது. இங்கே அவன் அறிவு வேலை செய்யவில்லை. ஆத்திரம் கடைசியில் அழிவை தந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்தற் கரிய தியைந்தக்கால், அந்நிலையே
செய்தற் கரிய செயல்.
- திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாராளுமன்றத்தில் இருக்காத பாராளுமன்ற உறுப்பினர்கள்

பாராளுமன்றம் என்பது இந்த நாட்டைத் தாங்கி நிற்கின்ற தூண்.

அதனாலேயே ஏகப்பட்ட நிதியைச் செலவிட்டுப் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

தவிர, பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றவர்களும் தம்மளவில் நிறைந்த செலவில் பிரசாரம் செய்கின்றனர்.

எங்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பினால், நாங்கள் அதனைப் பெற்றுத் தருவோம் - இதனைப் பெற்றுத் தருவோம் என்பதாகப் பிரசாரம் நடக்கும்.

அவ்வளவுதான், பாராளுமன்றத்துக்குத் தெரிவாகிவிட்டால், அநேகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றக் கூட்டத் தொடர்களுக்கு ஒழுங்காகச் செல்லாமல், பாராளுமன்றக் கூட்டத்தொடர்களில் முழு நேரமும் பிரசன்னமாகாமல் இருப்பதைக் காண முடியும்.

இதில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முடிந்தளவில் பாராளுமன்றக் கூட்டத் தொடரில் கலந்து கொண்டு எங்கள் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதில் மிகவும் ஈடுபாட்டுடன் செயற்படுகின்றனர்.

ஆனால் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் பாராளுமன்றக் கூட்டத்தொடர்களுக்குச் செல்லாமல் தவிர்ப்பதை அல்லது கூட்டத்தொடரில் முழுமையாகப் பங்கேற்காமல் விடுவதைக் காணமுடியும்.

அதிலும் குறிப்பாக எமது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது, சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்கள் வெறுதாகி இருப்பதை அவதானிக்க முடியும்.

இதனைச் சுருங்கக்கூறின், பாராளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்கள் பேசும்போது அதனை உற்றுக் கேட்பதற்கும் அதற்குப் பதிலளிப்பதற்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லாதிருப்பது; பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பற்ற செயலைச் சுட்டி நிற்பதாகும்.

எனவே பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் கடமையை ஒழுங்காகச் செய்வதாயின், முதலில் பாராளுமன்றக் கூட்டத் தொடர்களில் முழுநேரமும் பிரசன்னமாக இருக்க வேண்டும்.

அதை அவர்கள் செய்யத் தவறும் பட்சத்தில் அதனை வலுப்படுத்தக்கூடிய ஏற்பாடுகளை சட்டமாக்குவது அவசியம்.

ஆம், பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட போதிலும் அவர்கள் பாராளுமன்றக் கூட்டத்தொடர்களில் ஒழுங்கான வரவைக் கொண்டிருக்காவிடில், முழு நேரம் இருப்பை உறுதி செய்யாவிடில் அவர்களின் பதவிகளை வெறுதாக்கக்கூடிய சட்ட ஏற்பாடுகள் இருக்க வேண்டும்.

இதனைச் செய்யாத பட்சத்தில் அவரவர் பாராளுமன்றத்தில் உரையாற்றிவிட்டு, அங்கிருந்து நடையைக் கட்டிவிடுவர்.

ஈற்றில் உரையாற்றுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் கௌரவ சபாநாயகரே! என விழித்து பாராளுமன்றத்தில் வெறுதாக இருக்கும் கதிரைகளுக்காக உரையாற்றுகின்ற மிக மோசமான நிலைமை தொடர்வதைத் தடுக்க முடியாமல் போகும்.

# உலகில் 28 கோடி பேர் பட்டினியால் தவிப்பு

## ஐ.நா வெளியிட்டுள்ள அதிர்ச்சித் தகவல்

**(ஜெனீவா)**

**உலகம் முழுவதும் கடந்த ஆண்டில் (2023) 28 கோடி பேர் கடுமையான பட்டினியை எதிர்கொண்டதாக ஐக்கிய நாடுகள் உணவு பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.**

இந்த நிலையில் இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் உணவு பாதுகாப்பு அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "2023 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் உணவு பாதுகாப்பின்மை மோசமடைந்த நிலையில் சுமார் 28.20 கோடி மக்கள் கடுமையான பட்டினியால் பாதிக்கப்பட்டனர்.

குறிப்பாக போர்ச் சூழல் உள்ள காசா மற்றும் சூடானில் கடும் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் தீவிர வானிலை நிகழ்வுகள் மற்றும் பொருளாதார பாதிப்புகள் உள்ளிட்டவைகளால் கடுமையான உணவு பாதுகாப்பின்மையை எதிர்கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

பட்டினியால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக அதிகரித்துள்ளதுடன் போர், காலநிலை மற்றும் வாழ்க்கை செலவு நெருக்கடி ஆகியவற்றால் 2023 ஆம் ஆண்டில் சுமார் 30 கோடி மக்கள் கடுமையான உணவு நெருக்கடியை எதிர்கொண்டனர்.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டில் 2.40 கோடி மக்கள் அதிகரித்துள்ளதுடன் ஆப்கானிஸ்தான், கொங்கோ ஜனநாயக குடியரசு, எதியோப்பியா, நைஜீரியா, சிரியா மற்றும் ஏமன் ஆகிய நாடுகளில் நீடித்த பெரும் உணவு நெருக்கடிகள் தொடர்கின்றன.

ஹைட்டி நாட்டில் மோசமான அரசியல் ஸ்திரமின்மை மற்றும் விவசாய உற்பத்தி குறைந்ததால் பட்டினி ஏற்பட்டுள்ளதோடு எல் நினோ வானிலை நிகழ்வு மேற்கு மற்றும் தென்னாபிரிக்காவில் கடுமையான வறட்சிக்கு வழிவகுக்கும்.

13.50 கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ள 20 நாடுகள் அல்லது பிரதேசங்களில் கடுமையான பட்டினிக்கு மோதல் அல்லது பாதுகாப்பின்மை சூழ்நிலைகள் முக்கிய காரணமாகவுள்ளன.

வெள்ளம் அல்லது வறட்சி போன்ற தீவிர காலநிலை நிகழ்வுகள் 18 நாடுகளில் 7.20 கோடி மக்களின் கடுமையான உணவு பாதுகாப்பின்மைக்கு முக்கிய காரணமாகும்.

மேலும் பொருளாதார பாதிப்புகளால் 21 நாடுகளில் 7.50 கோடி மக்கள் பட்டினி பாதிப்பை சந்தித்தனர்" என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## புதிய கல்வியற் கல்லூரிக்கு 60,000 பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

புதிய கல்வியியற் கல்லூரி ஆட்சேர்ப்புக்கு 60,000 பேர் விண்ணப்பித்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதற்கான பணிகள் அடுத்த வாரத்திற்குள் ஆரம்பிக்கப்படும்.

மேலும், கல்லூரி பயிற்சி முடித்த 4,160 பேர் கல்லூரிகளை விட்டு வெளியேற உள்ளதாகவும் அதேவேளை ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 23,005 பேர் பணியமர்த்தப்பட விருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

## நுவரெலியாவில் ஸ்ரோபெரி பண்ணை விவசாய திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது ஸ்ரோபெரி மாதிரிக் கிராமத்தை நுவரெலியாவில் நிறுவுவதற்கு விவசாய அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதல் கட்டமாக நுவரெலியாவில் 40 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு நிதி ஒதுக்கீடு,ஸ்ரோபெரி செடிகள் மற்றும் புதிய தொழில்நுட்பம் மற்றும் நீர் விநியோகம் வழங்கப்படவுள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்திற்கு ஒரு விவசாயிக்கு தலா 13 இலட்சம் ரூபா செலவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 750,000 ரூபா விவசாய அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்படுவதோடு, மீதமுள்ள 6 இலட்சத்தை அந்தந்த விவசாயிகள் முதலீடு செய்ய வேண்டும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந் நிலையில், ஸ்ரோபெரி திட்டத்திற்கு 40 பாதுகாப்பான பச்சை வீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த வீடுகள் அனைத்தையும் ரிமோட் கண்ட்ரோல் மூலம் முழுமையாக தானியங்கி முறையில் செயற்படுத்த முடியும் என்றும் விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-6)

## பால் தேநீர் விலையை குறைக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை குறைப்பு சலுகையை நுகர்வோருக்கு வழங்கும் வகையில் ஒரு கோப்பை பால் தேநீரை 80 ரூபாய்க்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத், சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களிடம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

அத்துடன், டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததன் காரணமாக உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பால்மா இறக்குமதியாளர்கள் பால்மாவின் சில்லறை விலையை குறைக்க தீர்மானித்துள்ளதாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அண்மைகாலமாக பால்மா விலை உயர்வு காரணமாக, பால் தேநீர் அருந்துவதற்கு ஹோட்டல்களுக்கு வருவதை மக்கள் தவிர்த்து வந்தனர்.

தற்போது அந்த நிலை மாறி, மீண்டும் 80 ரூபாய்க்கு ஒரு கோப்பை பால் தேநீர் குடிக்கும் வாய்ப்பு மக்களுக்கு கிடைத்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## உத்தேச மின்சாரத்துறை திருத்தச் சட்டமூலம் நேற்று பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

உத்தேச மின்சாரத் துறை திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறித்த சட்டமூலத்தை பாராளுமன்றில் முன்வைத்தார்.

உத்தேச மின்சாரத் துறை சீர்திருத்தங்கள் இலங்கை மின்சார சட்டமூலமாக மாற்றப்பட்டு கடந்த 17ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

இதற்கமைய, இன்றிலிருந்து எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு அதன் சட்டபூர்வதன்மையை உயர் நீதி மன்றத்தில் பொது மக்களால் சவாலுக்கு உட்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
# ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796-1832)

பகுதி IV

18

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

குடியியற் சேவையாளருள் சிலர், தம் உயர் அறிவினாலும் ஆராய்ச்சிகளினாலும் இலங்கையின் கலை, கலாச்சார வளர்ச்சிக்கும் உதவி புரிந்தனர். உவில்லியம் ரொல்ப்றி என்பவர் விவிலிய நூலை சிங்களத்துக்கு மொழிபெயர்த்தார்.

சமுவேல் ரொல்ப்றி "சிதற் சங்கராவ" எனும் நூலை ஆங்கிலத்துக்கு மொழி பெயர்த்தார். ஜோண் டீஓயிலி "கண்டி இராச்சியத்தின் அரசியற்றிட்டச் சுருக்கம்" எனும் நூலை எழுதிச் சென்றார், ஜோஜ் ரேணர் சிங்கள, பாளி மொழிகளைக் கற்று "மகாவம்சம்" எனும் நூலைக் குறிப்புக்களுடன் தொகுத்து வெளியிட்டார். இவை, ஆங்கிலக் குடியேற்றச் செயலாளர்களின் உயர் அறிவையும் ஈடுபாட்டையும் எடுத்துரைக்க வல்லன.

### ஆங்கிலேயரின் நீதி பரிபாலனம்

ஆங்கிலேயர் கரையோர மாநிலங்களை வென்ற பின் அங்கு ஒல்லாந்தர் விட்டுச்சென்ற நீதி பரிபாலன முறையினையே பின்பற்றினர். ரோமன் டச்சுச் சட்டம், தாழ் பிரதேசங்களில் சிங்களவரின் பழக்க வழக்கங்களுக்கேற்ற மாற்றங்களுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத் தமிழ்ப் பிரதேசத்தில் தேசவழமைச் சட்டங்கள் பின்பற்றப்பட்டன. சேர். அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரனினால் தொகுக்கப்பட்ட முகமதியர் நீதிக்கோவையை 1806 இல் மெயிற்லந்து அமுல் செய்தார்.

1815 ஆம் ஆண்டின் கண்டி மரபு மன்றத்தில், பிறவுண்றிக், கண்டி மக்களுக்குத் தம் பிரதேச வழக்கங்களின்படியே நீதி வழங்கப்படு மென உத்தரவாதமளித்தார்.

இவ்விதமாக ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்கத்தில் நீதி பரிபாலனம் இடத்துக்கிடம் இனத்துக்கினம் மாறுபட்டிருந்ததுமன்றி சிக்கல்கள் நிறைந்ததுமாகக் காணப்பட்டது. நாள் செல்லச் செல்ல இம்முறை மேலும் சிக்கலாயிற்று. ஏனெனில் ஆள்பதிகளும், நீதிபதிகளும் இங்கிலாந்தின் நீதாசன முறையின்படி சட்டங்களை ஆக்கவும் தீர்ப்புக்களைக் கூறவும் தொடங்கினர்.

### ஆங்கிலேயரின் நீதி மன்றங்கள்

1799 இல் நோத் பாதகவியல் குற்றங்களை விசாரணை செய்வதற்கு ஓர் உச்ச நீதி மன்றத்தையும் பிஸ்கால் மன்றுகளையும், குடியியற் குற்றங்களின் விசாரணைக்கு குடியியல் மன்றுகளையும், "லான்ட்ருட்" களையும் ஏற்படுத்தினார். இலங்கையிலிருந்த ஐரோப்பியர்கள் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளினால் மாத்திரம் விசாரணை செய்யப்பட்டனர்.

1802 இல் ஐந்து மாகாண நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டதுடன், லான்ட்ருட் மன்றுகள் ஒழிக்கப்பட்டன. 1812 இல் தீவின் பாதகவியல் நீதியதிகாரமும், ஐரோப்பியரின் மேல் குடியியல் அதிகாரமும் உச்ச நீதி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டன. எல்லாக் குடியியல் அதிகாரங்களும் மாகாண நீதிமன்றங்களில் விடப்பட்டன. அவ் வாண்டு இலங்கையில் ஜுரி முறையும் ஏற்படுத்தப்பட்டது.

சேர். அலெக்ஸான்டர் ஜோன்ஸ்ரனும் மெயிற்லந்தும் இலங்கைக்குப் பெற்றுத்தந்த மாபெரும் நன்மைகளில் ஒன்று அவர்கள் ஏற்படுத்திய ஜுரி முறையாகும். இம்முறை, கீழைத் தேயங்களில் இலங்கையில் முதன் முதல் பரீட்சிக்கப்பட்ட பொழுது, ஆரம்பந் தொட்டு நல்வெற்றியாக முடிந்தது.

ஜுரி முறையின் முக்கிய அம்சங்கள், இந்நாட்டில் தொன்று தொட்டு வழக்கிலிருந்துவந்த கன்சபாவைகளில் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருந்தன. ஆங்கில ஜுரி முறைக்கும், சிங்கள முறைக்குமிடையே இருந்த பிரதான வேறுபாடு யாதெனில் ஆங்கில முறை சாதி பேதங்களைப் பாராட்டவில்லை யென்பதாகும். ஆரம்பத்தில் ஒரு வழக்கில் தீர்ப்புக் கூறுவதற்குப் பதின்மூவர் ஜுரிகளாக அமர்த்தப்பட்டனர். பின்னர் எண்ணிக்கை ஏழாகக் குறைக்கப்பட்டது.

இலங்கையில் முதல் உச்ச நீதி மன்றம், கொழும்புக் கோட்டை யில் ஓர் அறையில் விசாரணைகளை நடாத்தி வந்தது. நோத், 1804 இல் இடத்தை ஹல்ஸ்டோப்புக்கு மாற்றினர். அன்று தொட்டு இவ்விடம் தான், நீதியினதும் சட்டத்தினதும் இருப்பிடமாக இயங்கத் தொடங்கியது.

### ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்பத்தில் இலங்கையின் நிதி நிலைமை

நோத் இலங்கையின் இராச்சியப் பாரத்தை ஏற்ற பொழுது அரசாங்கம் ஏறத்தாழ நிதியறவு நிலையை அடைந்திருந்தது. முதல் ஆண்டுகளில் இறை வருமானம் பிரதான அரசாங்க நிறுவகங்களின் செலவுக்கே போதாமல் போயிற்று. மிஞ்சிய செலவினை பிரித்தானிய திறைசேரி நிரவியது. இக் குறையைப் போக்க முதல் ஆள்பதிகள் பல முயற்சிகள் எடுத்தனர்.

முன்போன்று கறுவா வியாபாரம், உப்பு வியாபாரம், முத்துக் குளிப்பு என்பவை தொடர்ந்து அரசாங்கத்தின் ஏகபோக உரிமைகளாகவிருந்தன. பருத்தி, தும்பு, போன்றவற்றில் புதுவரிகள் விதிக்கப்பட்டன. நோத், பெண்கள் அணியும் ஆபரணங்களின் மேல் ஒரு வரியை பிரகடனம் செய்தார். பெண் ஒருவர் ஒரு சிலிங்கையும் (பிரித்தானிய காசு), ஒரு குடும்பம் நான்கு சிலிங்கையும் இறுக்க வேண்டுமென விதிக்கப்பட்டது.

இவ்வரியினால் பல குழப்பங்கள் ஏற்பட்டன. 1806 இல் மெயிற்லந்து இவ்வரியை நீக்கினர். இராசகாரிய முறையின் ஒழிப்பினால், இலங்கையின் விவசாயமும் வர்த்தகமும் விருத்தியடைவதுடன், அரசாங்க வருமானமும் அதிகரிக்குமென நோத் எதிர்பார்த்தார் ஆனால் அவரது எண்ணம் சித்தியடையவில்லை.

மெயிற்லந்து செலவினங்களை மிகவும் நுணுக்கமாகக் கட்டுப்படுத்தி வரவு-செலவுகளைச் சமன்படுத்துவதில் வெற்றி கண்டது மன்றி நோத் பட்டிருந்த கடன்களில் பலவற்றையும் அழித்தார். 1807 இல் அவர் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் கடை வரி ஒன்றினைப் பிரகடனம் செய்தார். இதன்படி வர்த்தகர்கள், தாம் விற்பனை செய்த தானியங்களில் இரண்டு வீத வரியும், ஏனைய பொருள்களில் மூன்று வீத வரியும் இருக்க வேண்டு மென விதிக்கப்பட்டது. நாளடைவில் இவ் வரி நீக்கப்பட்டு, இதேயளவு வரி இறக்குமதியான பொருள்களின் மேல் அறவிடப்பட்டது.

மெயிற்லந்தின் நிலச் சீர்திருத்தங்களினாலும் வருவாய் அதிகரித்தது. எனினும் கடைசி ஆண்டுகளில் வரவிலும் பார்க்கச் செலவு அதிகமாகவே இருந்தது.

### தெருக்கள் திறக்கப்படல்

எட்வட் பாண்ஸ் புத்திக் கூர்மையும், அனுபவமும்,விடாமுயற்சியும் மிகுந்தவர். இவர் தம்காலத்தையும் நேரத்தையும் நிர்வாக அல்லது நீதிச் சீர்திருத்தங்களில் செலவிடாது, தீவுக்கு வேண்டப்பட்ட முதல் தேவைகளில் ஒன்றான தெருக்களை அமைக்கும் வேலையை உடனடியாகக் கையாண்டார்.

தாழ் பிரதேசங்களில் நல்ல நிலையில் பாதைகளின்மையானது வர்த்தகத்துக்கும் அரசாங்க நிர்வாகத்துக்கும் பெரும் இடையூறுகளை விளைவித்தது.

ஒல்லாந்தர் தம் ஆட்சியின் முதற் காலத்தில் பல நல்ல அகன்ற வீதிகளை அமைத்திருந்தனர். அவையாவன : திருகோணமலை-முல்லைத்தீவு-யாழ்ப்பாணம்-மன்னர் வீதி - 249 மைலகள், மன்னர்-கொழும்பு வீதி 175 மைல்கள், கொழும்பு-காலி-மாத்தறை வீதி -114 மைலகள், மாத்தறை-மட்டக்களப்பு வீதி-123 மைல்கள் என்பனவாகும்.

ஆனால் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் ஏற்பட்ட ஒழுங்கீனத்தினதும் நிதியறவினதும் காரணமாக அவை பாராமுகமாக விடப்பட்டுச் சீரழிந்து போகலாயின. 1796 இல் ஆங்கிலேயர் வந்திறங்கிய பொழுது ஒரு தெருவையேனும் நல்ல நிலையிற் காணமுடியவில்லை.

பிரித்தானிய துருப்புக்கள் நீர் கொழும்பினின்று கொழும்பை நோக்கி முன்னேறிய பொழுது பீரங்கிகளை ஒடுக்கமான பாதைகளின் வழியாகவும் மணலினூடாகவும் இழுத்துச் செல்ல வேண்டியதாயிற்று. இப்பாதைகளில் வண்டிகளும் கரத்தைகளும் பிரயாணம் செய்ய முடியாமற் போனதினால் மக்கள் கால்நடையாகப் பிரயாணம் செய்ய வேண்டியவர்களாயினர். பொருள்கள் எருதுகளின் அல்லது கூலிக்காரக் காவிகளின் துணை கொண்டு செல்லப்பட்டன.

ஆள்பதிபோன்ற கனவான் ஒருவர் பயணம் செய்வதானால் அவருக்கு நூற்றுக்கணக்கான கூலியாள்கள், யானைகள், குதிரைகள் தேவைப்பட்டன. மேலும் மலைநாட்டில் பிரயாணம் செய்வதானால் அது பன்மடங்கு கடினமாயிற்று.

பழைய காலத்தில் கண்டியின் தொலைவு அதனை இலகுவில் அடைய முடியாமை, அதனுள் பிரயாணம் செய்வதன் கடினம் போன்ற காரணிகள் அந் நாட்டிற்கு அந்நியரின் படையெடுப்புக்களிலிருந்து பாதுகாப்பைப் பெற்றுத் தந்தன. இந்நிலை புதுப் பிரித்தானிய ஆட்சியாளருக்குச் சொல்லொணா இன்னல்களை விளைவித்தது.

எனவே எட்வட் பாண்ஸ் 1820 தொடக்கம் கோட்டைகளையும் காவலிடங்களையும் அமைக்கும் வேலையை நிறுத்தி தெருக்களை அமைக்கும் வேலையை ஆரம்பித்தார். 1821இல் பாண்ஸ் கொழும்பு - கண்டி வீதியை அமைக்கும் வேலையினை அங்குரார்ப்பணம் செய்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா...

கைவசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 1000 மில்லிக்கிராம் கஞ்சா மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபரை வவுனியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10,250)

## QR குறியீட்டுடன்...

தம் செய்யப்பட்டு, தற்போதுள்ள தேசிய அடையாள அட்டையில் இருந்த பார் குறியீடு நீக்கப்பட்டு, இதற்குப் பதிலாக கியூ.ஆர் குறியீட்டுடன் கூடிய புதிய அடையாள அட்டை விரைவில் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## ஈரான் ஒரு...

டும் நாட்டிற்கு திரும்பிய வேளையில், அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈரான் தனது எதிரிகளை வலுவான மற்றும் கௌரவமான இடத்தில் இருந்து நடத்துவதாகவும் நட்பு நாடுகளுடன் ஈரான் தொடர்ந்தும் வலுவாக பயணிப்பதையே இந்த விஜயம் வெளிப்படுத்துவதாகவும் கலாநிதி இப்ராஹிம் ரைசி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விஜயங்கள் சில காலத்திற்கு முன்பே திட்டமிடப்பட்டதாக ஈரான் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான விஜயத்தின் முதற்கட்டமாக உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை திறந்து வைத்து, ஈரானின் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் சேவைகளை இலங்கைக்கு வழங்குவதாகவும் அவர் கூறியுள்ளார். (ம-7,10)

## சீன கம்யூனிஸ்ட்...

கத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பொருளாதாரம் மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை மீள மீட்டெடுக்க ஒரு மில்லியன் புதிய தொழில்கள் மற்றும் தொழில் முனைவோரை உருவாக்க உதவுமாறு சீன கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகளிடம் எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த வருடம் தேர்தல் ஆண்டாக இருப்பதினால், இதன் முக்கியத்துவம் தொடர்பிலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது எடுத்துரைத்துள்ளார். (ம-7,10)

## தேவையேற்...

சிறப்புப் பயிற்சி பெற்ற 100 பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொண்ட 50 மோட்டார் சைக்கிள் குழுக்கள் நேற்று கட்டுகுருந்த விசேட படைப் பயிற்சி முகாமில் 02 வாரப் பயிற்சியை நிறைவு செய்து விசேட அதிரடிப்படை மோட்டார் சைக்கிள் குழுக்களுடன் இணைந்து செயற்படும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், இலங்கை பொலிஸாரால் இந்நாட்டில் சிறப்பாக செயற்பட முடியும். போதைப்பொருள் மற்றும் பாதாள உலக குழுக்களிலிருந்து நம் நாட்டை காப்பாற்றவே நீதி நடவடிக்கையை தொடங்க காரணம்.

அனைவரும் அச்சமின்றி இலக்கை நோக்கிச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அவசரகாலத்தில் கையில் இருக்கும் துப்பாக்கியை உபயோகிக்க நேரிட்டால், அதைப் பயன்படுத்துங்கள். நாங்கள் உங்களுக்காக நிற்கிறோம். தவறு செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுங்களென்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,10)

## வருமானம்...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டிருந்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் முறையான நிதி முகாமைத்துவம் மற்றும் வருமான முறைமையைப் பார்க்கும்போது, 2024 ஆம் ஆண்டு வருமான இலக்குகளை எட்டக்கூடிய ஆண்டாக அமையும் எனவும் இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த ஆண்[illegible] முகாமைத்து[illegible] கடும் சவாலை எதிர்கொள்கிறது. தற்போதைய சட்டத்தின்படி கடன் பெறவும், பணத்தை அச்சிடவும் முடியாமலிருப்பதே அதற்கு காரணமாகும். நலன்புரி மற்றும் மீள்கட்டமைப்புச் செயற்பாடுகள் அதிகமாக காணப்பட்டாலும், நாட்டில் சரியான முறையில் நிதி நிர்வாகம் செயற்படுகிறது என இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7,10)

## மாநாட்டுக்கு...

இடைக்கால தடை உத்தரவு தொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஐந்தாவது எதிராளியான சண்முகம் குகதாசன் நேற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால், திருகோணமலையில் அவரது சரியான முகவரிக்கு மீண்டும் அழைப்பு கட்டளை அனுப்புவதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்போது முதலாம் மற்றும் மூன்றாம் எதிராளிகள் தரப்பு சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தங்கள் தரப்பு கருத்துக்களை முன்வைக்க கால அவகாசம் கோரினார்.

இதனையடுத்து எதிராளிகள் தமது சமர்ப்பணங்களை முன்வைக்க அவகாசம் வழங்கி ஜூன் 20ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதேவேளை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பாக திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றதைத் தொடர்ந்து வழக்கு எதிர்வரும் மே 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,33)

## பொரு...

கொழும்பு ITC ரத்னதீப அதிசொகுசு ஹோட்டல் கட்டிடத்தை நேற்று வியாழக்கிழமை திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகவே மக்கள் அதில் பங்கெடுத்தனர். இருப்பினும் அந்தப் பொருளா தார [illegible] இரண்டு வருடங்களில் நாட்டை மீட்டெடுக்க எம்மால் முடிந்தது. ,

தற்போது கொழும்பு சுற்றுலா நகரமாக மாறியுள்ளது. நட்சத்திர ஹோட்டல்கள் பல காணப்படுவதால் சுற்றுலா வியாபாரத்தின் மீது நம்பிக்கை வைக்க முடியும்.

சரிவடைந்த பொருளாதாரத்தை மீட்பதற்கான அஸ்திரமாகவும் அது அமைந்திருக்கும். சுற்றுலா வியாபாரத்தினால் இலங்கையை துரிதமாக மீட்கலாம். அதற்கான வசதிகளை வழங்க நாம் தயார்.

அவ்வாறானதொரு மக்கள் போராட்டம் மீண்டும் ஏற்படாதவாறான பொருளாதாரத்தை கட்டமைக்க வேண்டும். அதற்கு தேவையான திட்டங்களை நாம் செயற்படுத்துவோம். இந்த திட்டங்களால் பொருளாதாரத்தையும் நிலைப்படுத்த முடியும். அதனால் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்வடையும் என்றார். (ம-7,10)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.04.25
சீட்டிழுப்பு இலக்கம் 5456
F 1 2 2 7 7 4
அத சம்பத
F 2 7 7 4
சீட்டிழுப்பு இலக்கம் 31
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.04.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1486
N 23 25 30 44 N
Double Chance 03107

மெகா பவர்
திகதி 25/04/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1804
M 20 17 24 31 55
Double Chance 11269

லக்கி 7 VIP
திகதி 2024.04.25
சீட்டிழுப்பு இலக்கம் 0282
R 1 0 5 6 1 1 R

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3698
சீட்டிழுப்பு திகதி 25.04.2024
A 17 42 51 66
A 48122
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.25
சீட்டிழுப்பு இலக்கம் 0765
கன்னி 10 22 47 55 கன்னி
63475 08

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.04.2024 வெற்றி வாரம் 164 வர்ணம் மஞ்சள்
ஆங்கில எழுத்து N
2 3 0 8 9 9
U
65100
அடுத்த சுப்பர் ஜக்பொட் 21,095,848.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2430 வர்ணம் பச்சை சீட்டிழுப்பு திகதி 25.04.2024 தினம் வியாழன்
20 38 60 66 Z
84213
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,996,577.60
DLB

சனிதா
திகதி 2024.04.25 வெற்றி வாரம் 4591 வர்ணம் சிவப்பு
13 33 56 61 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,872,407.60
87320
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4142 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.04.25 தினம் வியாழக்கிழமை
44 48 55 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,357,950.00
405462
DLB

கப்ருக
F 15 06 11 41 66
1606
630473
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 519,199,965.00
25.04.2024 வியாழன்
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.108,351,133.60
01 15 20 26 X
915701
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு:

(551)

**074 17 37 684**



**CANADA VISA**

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.

**021 222 5686**
**076 424 7111**

(511)

**Expo Net Overseas Consultants**
345, Kasthuriyar Road, Jaffna.


# துமிந்த திஸாநாயக்கவுக்கு சுதந்திரக் கட்சியில் புதிய பதவி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக துமிந்த திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற அக்கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழு கூட்டம் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் நேற்று பிற்பகல் கொழும்பில் கூடிய போதே இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ம-7,10)


# மரண அறிவித்தல்

**திருமதி சந்தானா இன்னேசம் செபஸ்ரியாம்பிள்ளை**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



தோற்றம் : 1930.03.20 மறைவு : 2024.04.24

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் செல்வபதி, பற்றிமா வீதி மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்தானா இன்னேசம் செபஸ்ரியாம்பிள்ளை அவர்கள் 24.04.2024 அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்ற தோமஸ் செபஸ்ரியாம்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் செல்வமலர், செல்வறாஜி, செல்வநேசம் (லண்டன்), செல்வபிறேமா, செல்வநிலா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற றெக்ஸ் ஸ்ரீபன் மற்றும் ஸ்ரனிஸ்லோஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் டவ்னி - அமல்றாஜ், சொவ்னி - வினோத்றாஜ், பியோஜன் (லண்டன்), சியோபின் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆரோன், அனிலியா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க இரங்கற் திருப்பலி 2024.04.27 நாளை சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"செல்வபதி",
பற்றிமா வீதி,
மாதகல்.

(557)

தகவல்:
குடும்பத்தினர்



**வீடு வாடகைக்கு**

நல்லூரில் தனிப்பாதையுடன் அனெக்ஸ் வீடு வாடகைக்கு உண்டு. 2 பெண்கள் குடியிருக்க குறைந்தது ஒரு வருடத்திற்கு மாத்திரம் வழங்கப்படும்.

(562)

**077 756 1066**


# அநுரகுமார சுவீடன் விஜயம்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சுவீடனுக்கு விஜயம் செய்ய உள்ளார்.

சுவீடனின் ஸ்டோக்கோமில் இலங்கை புலம்பெயர் சமூகத்துடன் நாளை சனிக்கிழமை சந்திப்பு ஒன்றை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தவிர வேறு சில சந்திப்புகளையும் அநுரகுமார திஸாநாயக்க மேற்கொள்ள உள்ளதாக கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசிய மக்கள் சக்தியின் சுவீடன் பிரிவு இந்த விஜயத்தை ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் கனடாவிற்கு விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,10)


**கணக்கீடு**

A/L 2024 LKAS
ஆரம்பம் : நாளை
A/L 2025 தொங்கல் க/கு
ஆரம்பம் : நாளை

**S.தவா**

DCM யாழ்நகர் | CCA சுன்னாகம்

NIRU கோண்டாவில்
பிரத்தியேக வகுப்பு கொக்குவில்

(C-0209)

**T.P : 077 239 5858**


# பால்மா விலை குறைக்கப்படாது

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையை மீண்டும் குறைப்பதற்கு சங்கம் என்ற ரீதியில், தீர்மானம் எடுக்கப்படவில்லை என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பால்மாவின் விலை திருத்தம் தொடர்பில் உத்தியோகபூர்வ கலந்துரையாடல் எதுவும் இடம்பெறவில்லை என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் அசோக பண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 400 கிராம் பால்மாவின் விலையை 60 ரூபாவாலும், ஒரு கிலோகிராம் பால்மாவின் விலையை 150 ரூபாவாலும் குறைப்பதற்கு பால்மா இறக்குமதியாளர்கள் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)


**வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆலோசனை**

கனடா மற்றும் லண்டன் போன்ற நாடுகளில் உள்ள பராமரிப்பாளர் Care Giver வேலைகள் தொடர்பான ஆலோசனைகளை தற்போது நாம் வழங்கி வருகின்றோம்.

- தேவையான கற்கை நெறிகள் என்ன?
- தேவையான சான்றிதழ்கள் என்ன?
- எவ்வாறு விசாவுக்கு விண்ணப்பிப்பது?
- எவ்வாறு வெளிநாடு சென்ற பின்னர் உழைத்து கட்டணங்களை செலுத்துவது?
- எவ்வாறு குடும்ப அங்கத்தவர்களை அழைத்துச் செல்வது?

- போன்ற பல்வேறு வகையான ஆலோசனைகளை வழங்கி வருகின்றோம்.
- நீங்களும் வெளிநாட்டில் வேலை வாய்ப்பினை பெற்றுக்கொள்ள விரும்பின் எம்மிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம்.
- நேரடியாக எமது அலுவலகத்துக்கு வருவதன் மூலம் விவரமான விளக்கங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

(C-0205)

**Soft View College of Education (PVT) Ltd**
இல. 219B, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
**077 365 3989**



**வேலைவாய்ப்பு**

யாழ் நகர் மத்தியில் இயங்கும் பிரபல Fancy Shop ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

- பகுதி நேர வேலைவாய்ப்பு வசதியும் உண்டு.
- EPF/ETF வசதிகளும் உண்டு.

(19069)

**075 762 2092**



**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி கோமகள் சிவாதரன் அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னத்துரை பத்மநாதன்**

அவர்கள் காலமான செய்தியறிந்து நாம் துயருறுகின்றோம்.
அவர்களது துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.
அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 25.10.1938 மறைவு 23.04.2024

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்

(C-0211)



**கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு**

தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.

A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து

(C-0208)

V2 GUEST 0743900360 0743900361



**V2 VISA SERVICES கனடா**

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்

• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0208)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.